Germany: 1DM, Switzerland: 1SFr, France: 5Frs, U.K: 50P, Canada: $ 1, Denmark: 5Kr

வருடம் - 03 திருவள்ளுவர் ஆண்டு - 2027 இதழ் - 26

Largest Circulation in Europe

# இளைஞன்

ஆடி - 1996 மாத இதழ் - ஜெர்மனி

Tel: 069/ 704439 - ELAIGNAN TAMIL MONTHLY - Fax: 069/ 775669

ஆதவா ஆசியா சென்ரர்

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், ஓடியோ வீடியோ, சிடி, வார மாத பத்திரிகைகள், மரக்கறி, கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள—

ADAVAA ASIYA CENTAR

Taunus Str- 15, 60329 Frankfurt/M, Germany
Tel: 069/ 25 03 61-2, Fax: 069/ 23 40 45

# லட்சுமன் கதிர்காமரின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு!

(சென்னை)

இலங்கை இராணுவம் பல்லாயிரக்கணக்கான அப்பாவித்தமிழர்களை ஈன இரக்கமின்றி கொன்றும், ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை உடமைகளை இழந்து நாட்டைவிட்டு காட்டிற்கு விரட்டியடித்த சந்திரிகா அரசின் வெளிவிவகார அமைச்சரின் இந்திய வருகை எமக்கு மட்டுமல்ல உலகெங்கிலுமுள்ள தமிழர் மனதிலே ஓர் ஐயப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது என்று தமிழக பாட்டாளிகள் மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர். ராமதாஸ் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

தொடர்ந்து அவரது அறிக்கையில் திரு. தேவகவுடா அவர்கள் இந்தியப் பிரதமராக பொறுப்பு ஏற்றவுடன் தனது முதல் சந்திப்பாக ஈழத்தமிழர்களை கொன்று குவித்துவரும் இலங்கை அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் லட்சுமன் கதிர்காமரை வரவேற்றிருப்பது தமிழ்மக்களை பெரும் ஏமாற்றத்திற்குள்ளாக்கி இருக்கின்றது.

இந்த சந்திப்பு நடந்ததை

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

## ‘ரிவிரெச-3’ பின்னர்...?

(கொழும்பிலிருந்து பார்த்தீபன்— மூன்றாம் பக்கம் பார்க்க...)

## இலங்கை அரசின் கபட நாடகம்!



யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும், இராணுவ ஆட்சியில் யாழ் தமிழ்மக்களுக்கு ஒரு குறையும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும், உலக மக்களை நம்ப வைப்பதற்காகவும், இலங்கை அரசினாலும் இராணுவத்தினாலும் ஏற்படுத்தப்படும் பொய்ப் பிரச்சாரத்தின் புகைப்படம் இது!

## கந்தப்புவும், சோமண்ணையும்



சோமண்ணை: எப்ப பார்த்தாலும், இவன் சிவத்தான் ஆசியன் கடையில சும்மா வந்து நிற்கிறான் என்ன சங்கதி?

கந்தப்பு: அதில்லை, பெஞ்சாதிக்கு பயத்திலை, வேலைக்குப் போறன் எண்டு சொல்லிப்போட்டு, நாள் முழுக்க கடையில வந்து நிண்டு தூங்கிறான்.

சோமண்ணை: ???!!...

-கர்கி. பிராங்பேர்ட்-

உங்கள் தேவையே எங்கள் சேவை! — நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளுக்கு..

RMC PARADISE



தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 10 மணி வரை திறந்திருக்கும் எமது ஸ்தாபனத்தில், எல்லாவித மரக்கறி, மீன் வகைகளையும், சகல சஞ்சிகைகள், பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

Kuechen Gasse 16, 4052 Basel, Switzerland, Tel: 061/2712207

(பாசல் பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக)



FREE E - BOOKS (TAMIL) — 1080/09
பொன்னாச்சி நகன்

வருடம் - 03 இதழ் - 27 ஆடி - 1996

## இளைஞன் பார்வையில்!

# பஞ்ச(ம) கட்சிகளுக்கும் பட்டினியும் பசியுமா?

இலங்கையில் நிலை கொண்டுள்ள ஐந்து விடுதலைப்போராளிக் குழுக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். யாருக்கு? மதியூகத்தாலும் அரசியலில் பழுத்த அறிவும் பக்குவமும் அடைந்து முதிர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் டாக்கடர் மு. கருணாநிதி ஐயா அவர்களுக்கு என்பது தான் பெரிய வேடிக்கை.

தமது வேண்டுகோளில் இலங்கையின் வட-கிழக்குப்பகுதிகளில் இடைக்கால நிர்வாகக் கவுன்சிலை அமைக்க இந்திய மத்திய அரசின் ஆதரவைப்பெற்றுத் தருமாறும், இதுபற்றி அதிபர் சந்திரிகாவிடம் பலமுறை தாம் வலியுறுத்தியும் பயன் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டது மேலும் ஒரு அவலட்சமான வேடிக்கை என்றே கூறவேண்டும்.

அத்துடன் நிற்காது, யாழ்ப்பாணம் சென்று அரசியல் நடவடிக்கைகளைத்தாம் மேற்கொள்ள சந்திரிகா அம்மையார் அனுமதிக்கவில்லை என்றும் புலம்புகின்றனர், ஆளமறியாது காலைவிட்ட இந்த பஞ்ச(ம) கட்சிகள். என்னே அவலம்!

இலங்கை பாராளுமன்றத்தில் அரசோச்சும் கட்சிக் குழுமத்தில் ஐந்து கட்சிகளும் இடம் வகித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு நல்குகின்றனர். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி சிறீமாவோ பண்டாரநாயக்காவினதும் சந்திரிகாவினதும் அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முட்டுக்கட்டையாக இருப்பது பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று, ஆசனங்களை ஆசையுடன் ஆக்கிரமித்துள்ள தமிழ் துரோகிகள் என வர்ணிக்கப்படுபவர்களும் இக்குழுவில் அடங்குவர். ஒருவேளை த. ஐ. வி. முண்ணனி விதிவிலக்காகலாம்.

ஒன்பது வாக்குகளை மட்டுமே வென்று பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைப்பெற்று உலக சாதனையீட்டிய கட்சி உட்பட இவ்வைந்து குழுக்களும் தமிழரின் இலட்சியமாக இருக்கும் தமிழீழக் கோரிக்கையை மறந்தனர் போலும். இல்லாவிடில் விடுதலைப் போராட்டம் பல்லாயிரக்கணக்கான உயிர்ச்சேதங்களை சந்தித்து உச்சக்கட்டத்தில் இருக்கும் இந்நிலையில் கேவலம் இப்பஞ்ச(ம) கட்சிகள் 'ஒன்றும் வேண்டாம் நாயைப்பிடி' என்றளவுக்கு தமது சொந்த உயிர்களைக்காக்க அற்ப ஆசையில் வடகிழக்கு கவுன்சில் கேட்கும் அளவிற்கு அரசியல் ஒட்டாண்டிகளான நிலைக்கு (STATE OF POLITICAL BANKRUPTCY) தள்ளப்பட்டுள்ளனரா? இருக்கலாம், ஆச்சரியமேயில்லை. ஏனெனில் துரோகிகள் எல்லாம் என்றோ தண்டிக்கப்படுவார்கள், தவிக்கவிடப்படுவார்கள் என்பது சர்வ நிச்சயம்.

தமிழீழத்தைப்பெற உதவி புரியுங்கள் என்று கேட்டிருந்தால் மெச்சத்தக்க ஒன்றாக இருந்திருக்கும். இவர்கள் கேட்பது ஒரு சிறு துரும்பை எடுக்க குண்டன் ஒருவனின் உதவியை நாடுவது போன்றதொன்றாகும். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய் தேடி அலைந்த முட்டாள் தனமாகும். தனது பலத்தில் நம்பிக்கையில்லாத போர்வீரனின் கோழைத்தனத்திற்கும் இவர்களின் நிலையை ஒப்பிடலாம்.

அங்கிருந்து செல்லாது முந்தானைச் சேலைகளைக் கைவிட்டு, தாங்கள் சிறிமா-சந்திரிகா அரசுக்கு இனிமேலும் ஆதரவு தரமாட்டோம், அவர்களுக்கு எதிராக எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வாக்களிப்போம் என்று பகிரங்கமாக கூறுவார்களாயின் இரண்டில் ஒன்றை நிச்சயமாகப் பார்க்கலாம். ஒருவேளை 'சரி உங்கள் இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்றோம். நிச்சயம் எங்களை மட்டும் கை விடாதீர்கள்' என்று அரசு பதில் கொடுக்கலாம். அல்லது ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலம் ஆளும் அரசை வீழ்த்தலாம். இதனால் ஏற்படும் விளைவாக வரக்கூடிய பாராளுமன்றக் கலைப்புக்கும், தொடர்ந்து மீண்டும் ஒரு பொது தேர்தலுக்கும் இப்பஞ்ச (ஐந்து) குழுக்கள் சம்மதிப்பார்களா? என்ற யதார்த்தமான கேள்விகளுக்கு விடை காண்பதே முக்கியமாகும்.

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்' தமிழீழ மக்களின் உரிய அதிகாரங்களின்றி மறைமுகமான சுய பிரகடனம் போன்றே தங்களை ஈழத்தமிழர்களின் M P க்களாக இக்குழுவினர் பிரதிநிதிகளாயினர். ஆகையால் மீண்டும் ஒருமுறை பொது தேர்தல் வர இவர்கள் விரும்ப மாட்டார்கள்.

ஆகவே விடுதலைப்புலிகள் தமிழர்களுக்காக வேண்டிநிற்கும் தமிழீழக்கோரிக்கையை முறியடிக்கும் முகமாக எழுந்த இவ்வேண்டுகோள் இலங்கை சிங்கள அரசாங்க -பஞ்ச(ம) குழுவின் கலப்பின வேண்டுகோள் என்றே அரசியல் அவதானிகள் கருத இடமுண்டு.

ஈழம் என்பது இலங்கையின் தொன்மை வாய்ந்த சங்ககாலத்துப் பெயர். தமிழ் ஈழம் என்பது காலத்தின் கட்டாயத்தால் அழைக்கப்படும், தமிழர் வாழ் வடக்கு-கிழக்கு பகுதியை மட்டும் உள்ளடக்கிய பிரதேசம்.

மேலே குறிப்பிடப்பட்ட பஞ்ச குழுவில் உள்ள EROS, EPRLF. EPDP என்ற மூன்று குழுக்களின் பெயர்களிலுமே 'தமிழ்' எனக்குறிக்க "T" என்ற எழுத்து இல்லை என்பதையும் பலரும் அறிய வேண்டியது அவசியம். இதற்கும் அவர்களுக்குப்பஞ்சமா? இல்லை! இல்லை!! அவர்களுக்குப் பசியிருந்தாலன்றோ பஞ்சம் வரும், பசி வரும்.

'பாத்திரம் அறிந்து பிச்சை கொடு' என்பதற்கேற்ப எல்லாம் அறிந்த கலைஞர் முதல்வர் டாக்டர். மு.-கருணாநிதி அவர்கள் உரிய முறையில்தான் பிச்சை கொடுப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## வாசகர்கள் கவனத்திற்கு!

'இளைஞன்' ஆறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதால், ஒவ்வொரு மாதமும் 25 ம் திகதியே அச்சுக்குக்கொடுக்க வேண்டியுள்ளது. அதனால், உங்கள் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 20 ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். -இளைஞன் குழு-

"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

ELAIGNAN TAMIL MONTHLY
Largest Circulation in Europe
இளைஞன்

முகவரி:-
ELAIGNAN
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel: 069/ 70 44 39
Fax: 069/ 77 56 69

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: ARTIST SEGAR

ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணை ஆசிரியர்:
ஏ. ஜே. ஞானேந்திரன்

துணை ஆசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
12 மாதம்: 30 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்
சுவிற்சலாந்து
P. சந்திரன்
Haupt str. 54
4127 Birsfelden
Basel (CH)
பரீஸ்
ரமணன் வீடியோ பலஸ்
7, Rue Perdonnet
75010 Paris
டென்மார்க்
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers
லண்டன்
சிவம் - பரமலிங்கம்
15 Farn House
HA0 4Uy Wembly - UK
ஜேர்மனி
T. ஜோதி
Lange str. 243
59067 Hamm

இவ் இதழில் வரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்புடையவர்கள்.
ஆக்கங்களின் கருத்து மாறுபடாது அதனைச் சுருக்கவோ, திருத்தவோ ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.
"இளைஞன்" இதழிலிருந்து எந்த வொரு ஆக்கமும் மறுபதிபபுச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.



லக்சுமி ஆசியன் மாளிகை

உங்களுக்குத்தேவையான இலங்கை, இந்திய உணவுவகைகள், மரக்கறிகள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், 22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பிய வண்ணத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் புதிய, பழைய திரைப்படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் உண்டு. தரமான ஓடியோ, சீடிக்கு எம்மை நாடுங்கள். காஸ் அடுப்புகளும், சமையல் பாத்திரங்களும் வாடகைக்கு தரப்படும்.

-Huetten Platz 20 - 22, 35683 Dillenburg, Tel: 02771/6585 & 02778/2148, Fax: 02771/6508-

# 'ரிவிரெச - 3' ன் பின்னர்...?

**கொழும்பிலிருந்து பார்த்தீபன்**

"ரிவிரெச" நடவடிக்கையின் மூலம் ஆயுதப்படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ள போதிலும், அங்கு அவர்களால் நிம்மதியாக இருக்க முடியாத நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக குடாநாட்டுக்குள் விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ள கெரில்லாப் பாணியிலான தாக்குதல்கள் இராணுவத்தை நிலை தடுமாற வைத்துள்ளது. இரண்டாவதாக குடாநாட்டுக்குள் பாதுகாப்பான தரைப்பாதை ஒன்று இல்லாததால் இராணுவத்திற்கான விநியோகங்களை சீராகக்கிடைக்கச் செய்வதில் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.


யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகள் வாபஸ் பெற்றுக்கொண்ட போதிலும், அப்பகுதிக்குள் அவர்கள் மீண்டும் ஊடுருவி கெரில்லா பாணியிலான தாக்குதல்களை மேற்கொள்வார்கள் என்பது இராணுவத்தால் கூட எதிர்பார்க்கப்பட்டது தான். ஜூன் மாதத் தொடக்கத்திலிருந்து இவ்வாறான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் தீவிரப்படுத்தியிருப்பது, அரசின் தலையிடியை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

குடாநாடு பூராகவும் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதென்ற அரசின் "கதை" இதன் மூலம் அடிபட்டுப்போவதையும் அரசு விரும்பவில்லை. அதவேளையில் புலிகளின் ஊடுருவலை முற்றாகத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் மேலும் 10, 000 படையினர் தேவை என இராணுவத்தலைமை தெரிவித்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இராணுவம் ஆரம்பத்தில் பிரதான பாதைகளிலும் அதனையண்டிய பகுதிகளிலுமே தனது நிலைகளைப் பலப்படுத்தியிருந்தது. எனினும் உட்பகுதிகளிலும் புலிகள் இருக்கலாம் என்பதால் இப்போது பிரதான பாதைகளிலிருந்து பல மைல் தூரம் உட்பகுதிகளை நோக்கியும் இராணுவம் சென்றுள்ளது.


பெருமளவுக்கு இராணுவம் "உட்வாங்கப்பட்டுள்ள" நிலையில் அதன் செறிவும் குறைவடைந்துள்ளது. கெரில்லாத் தாக்குதலுக்கு இசைவான ஒரு சூழ்நிலை இதன்மூலம் ஏற்பட்டுள்ள

*தொடர்ச்சி 5 ம் பக்கம்...*



அரசின் இன்னுமொரு பொய்ப்பிரச்சார புகைப்படம். யாழ்ப்பாணம் 'சபீதா உணவக'த்தில் சாப்பாடு தயார்! என்பதைக்குறிக்கும் விளம்பரப் பலகை.

கடுகு முதல் தங்கம் வரை கொள்வனவு செய்ய நாடுங்கள்...



பிள்ளையார் றேடேர்ஸ்

எம்மிடம் சகல விதமான ஆசிய நாட்டு உணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், எவர்சில்வர் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்ற ரெடிமேட் ஆடைகள், சாறி வகைகள், அசல் 22 கரட் தங்க நகைகள் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் மனநிறைவுடன் - மலிவு விலையில் கொள்வனவு செய்ய நாடுங்கள்..

PILLIYAR TRADERS

Mainzer landstr - 91, 60329 Frankfurt/M, Germany, Tel & Fax: 069/ 23 02 68

Geschaeftsfuehrer - N. Mohanaraj - Car Tel: 0172/ 6713582

# போகிற போக்கில்..

ஏ. ஜே. ஜி



## போலிகள் ஜாக்கிரதை!


எதிலுமே போலிகள் நுழைந்து விடுவதை யாராலுமே தடுக்க முடியாது போலிருக்கின்றது. அரசியலிலும் 'திருவாளர் போலி' நன்றாகவே புகுந்து விளையாடுகின்றார்.
இந்தப்படத்தைப் பார்த்தீர்களா?




இந்தக்கோடை வெயிலுக்கு இதமாக, உடலைக் குளிர் நீர் வருட, மேலே கவர்ச்சியான ஒரு கன்னியின் படம் மேலும் குளிரூட்ட, ருஷ்ய ஜனாதிபதி, யாரோ ஒருவருடன் நடமாடும் தொலைபேசியில்ல தொடர்பு கொண்டிருப்பதைக் காண்கிறீர்கள் அல்லவா? வாழ்ந்தால் இப்படி சொகுசாக அல்லவா வாழவேண்டும் என்று நினைக்கிறீர்கள் போலிருக்கின்றது...
ஏமாந்து விட்டீர்கள்!
நீர்த்தொட்டியில் இருப்பவர் நிஜமான ருஷ்ய ஜனாதிபதி அல்ல, இது அவர் பெயரில் நடமாடும் பல போலிகளுள் ஒன்று. ஆச்சரியப்படுகின்றீர்களா?
நிஜமே தான்!
சில இக்கட்டனா சூழல்களில் நிஜம் பாதுகாப்பாக இருந்து கொள்ள, போலிகளே இடத்திற்கு இடம் போய் பிரசாரத்தில் (வரப் போகும் தேர்தலுக்கு) ஈடுபடுவதுண்டு.
இத்தேர்தலில் 'நிஜம்' மண் கவ்வினால் போலிகளின் உழைப்பு கெடப்போகின்றது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகப் போகின்றது!

## பேராசையும் பெருமரணங்களும்


திரைகடலோடியும் திரவியம் தேடலாம். ஆனால், திரைகடலில் போகும்போது 'உயிரை வாங்கலாமா?'
பாவம், தரைப்பயணம் 'படுமோசமாக இருக்கின்றதே என்று படகுகள், கப்பல்கள் மார்க்கமாக பயணமாக நினைத்தார்கள். ஆனால், எமனின் திருவிளையாடலோ வேறாக இருந்திருக்கிறது.
MV BUKOBA என்ற பயணிகளின் கப்பல் ஒன்று அண்மையில், விக்ரோரியா ஏரியில் கவிழ்ந்ததால் (அதிக சுமை என்பதே காரணம்) 500 க்கு மேற்பட்ட பயணிகளை ஏரி பலியெடுத்துள்ளது. தமது இறுதிப் பரீட்சை ஒன்றை முடித்துவிட்டு (அரச பாடசாலை ஒன்றில்) திரும்பிக்கொண்டிருந்த, 40 பாடசாலைப்பிள்ளைகள் தமது இறுதிப்பயணம் இது என்று முன்கூட்டியே தெரிந்திருந்தால் கப்பலில் ஏறியிருக்கமாட்டார்கள்.
விக்ரோரியா ஏரியின் சரித்திரத்தில் நிகழ்ந்த விபத்துக்களில் இதுவே படுமோசமானது என்கிறார்கள். கப்பல் அதிகாரிகள் கையில் லஞ்சத்தைத் திணித்துவிட்டு, அளவுக்கு மீறியவர்கள், ஏறிப் பயணஞ் செய்ததால் வந்த வினை இது என்கிறார்கள்.
ஏறத்தாழ 547 பேர் வரையில் மரணித்திருக்கலாம் என்றும், 114 பேர் தப்பிப் பிழைத்தார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால், உறுதியாக்கப்படாத சில தகவல்களின்படி 800 பேர் வரையில் இறந்திருக்கலாம் என்றும் கூறுகிறார்கள். ஆபிரிக்க நாடான ரன்சேனியாவை அடுத்தே விக்ரோரியா ஏரி அமைந்துள்ளது.
ஒரு சிலரின் பேராசை, பெறுமதியை நிர்ணயிக்க முடியாத எத்தனை நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டுள்ளது பார்த்தீர்களா?



ஏரியில் கவிழ்ந்து கிடக்கின்றது கப்பல்!




Frankfurter Allgemeine



## காட்டவேண்டிய இடத்தில் காட்டவில்லையே!

21 வயதான இந்த இளம் டென்னிஸ் வீராங்கனை ரசிகர்களைச் சுண்டியிழுக்கும் விதமாக உடுத்தியிருக்கிறார். இந்தப் புதிய டிசைனிலான கறுத்த உடை,

தொடர்ச்சி 22ம் பக்கம்...

## ரிவிரெச...

தும் கவனிக்கத்தக்கது. இதனால்த்தான் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு மேலும் 10, 000 இராணுவம் தேவை எனத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

## இராணுவ ஆட்சேர்ப்பு இலக்கை எட்டவில்லை

இதனைத்தொடர்ந்து இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் படலம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது. ஜூன் முதல் வாரத்தில் நாடு முழுவதுமுள்ள இராணுவ முகாம்களில் ஆட்சேர்ப்பு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்டன. இளைஞர்கள் படைகளில் சேர முன்வராததால், முடிவு திகதி நீடிக்கப்பட்டது. மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாகவே முடிவுத்திகதி பின்போடப் பட்டதாகக் காரணமும் சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக 10, 000 படையினர் தேவைப்படுகின்றது. அதே வேளையில், இராணுவத்தில் 17, 000 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. யுத்தங்களில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டாலும், பலர் மீண்டும் கடமைக்குவர முடியாதளவுக்கு காயம் அடைந்திருப்பதாலும், வேறு சிலர் இராணுவத்தைவிட்டு வெளியேறியிருப்பதாலுமே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இராணுவத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய பலத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்குப்பதிலாக இராணுவத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதே சிக்கலானதாகி விட்டது. "ரிவிரெச-1" முடிவடைந்தவுடன் நவம்பர்-டிசெம்பரில் இராணுவத்திற்கு 10, 000 பேர் சேர்க்கப்பட போதும் பயிற்சிக்கு அழைக்கப்பட்ட போது அவர்களில் 4, 000 பேர் "காணாமற் போய்விட்டார்கள்!"

இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட ஆர்வம் வற்றிவிட்டதையே இச்சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. கிராமப்புறச் சிங்களவர்களே பெருமளவுக்கு இராணுவத்தில் சேர்ந்து கொள்கின்றனர். இராணுவத்திலிருந்து தப்பிவந்தவர்கள் மற்றும் லீவில் வந்தவர்கள் சொல்லும் தகவல்களாலேயே இராணுவத்தில் சேர்வதற்கு இளைஞர்கள் மத்தியில் இப்போது தயக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இராணுவ வெற்றிகள் பற்றிய பிரச்சாரங்களின் மூலம் இந்த நிலைகளைச் சமாளிக்கக்கூடியதாக இருக்கும் என அரசாங்கம் நம்பியது. ஆனாலும், யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் அரசாங்க ஊடகங்கள் மேற்கொண்ட பாரிய பிரச்சாரத்தின் பின்னர்கூட இராணுவத்தில் சேரவேண்டும் என்ற ஆர்வம் சிங்கள் இளைஞர்கள் மத்தியில் பெருக்கெடுத்து ஓடாதது அரசுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது!

## தரைப்பாதை திறப்பு: சாத்தியமானது தானா?


ஆயுத- தளபாடங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கிவிடுவதற்கு பணம் இருந்தால் மட்டும் போதும். ஆனால், ஆட்தட்டுப்பாட்டை அவ்வாறு நீக்கிவிட முடியாது. கட்டாய இராணுவ சேவையை நடைமுறைக்குக்கொண்டு வருவதுதான் இதற்கான ஒரே தீர்வாக இருக்க முடியும். ஆனால், தமது பிள்ளைகள் இராணுவத்தில் சேர்வதை விரும்பாத ஜனாதிபதியோ அமைச்சர்களோ இதனையிட்டுப் பேசுவதுடன் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வார்கள்

இந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒன்றைத்திறக்க வேண்டும் என்ற தனது கனவை நனவாக்க என்ற முனைப்பில் பாதுகாப்புப்பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தை இருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 50, 000 இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கான உணவு மற்றும் ஆயுத தளபாட விநியோகங்களை கடல் மூலமாக அல்லது விமான மூலமாக மட்டுமே மேற்கொள்ளவேண்டியிருப்பது அரசுக்கு பாரிய செலவு பிடிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இருக்கின்றது. அத்துடன் இதற்குத் தேவையானளவு விமானங்களோ அல்லது கப்பல்களோ அராசாங்கத்திடம் இல்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒன்

தொடர்ச்சி 23 ம் பக்கம்...



*யாழ்பாணம் பெரிய வைத்தியசாலையில் நோயாளிகள் காத்திருக்கிறார்கள்*

உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும் பூர்த்தி செய்ய நாடுங்கள்!


சிவா ஆசியன் மார்க்கட்

பசுமையான காய்கறிகளா? இலங்கை, இந்திய கடலுணவுப்பொருட்களா? வீடியோ, ஓடியோ, சீடிக்களா, வார-மாத பத்திரிகைகளா, பலசரக்குப் பொருட்களா, வைபவ தேவைப்பொருட்களா, பெரியோர், சிறியோருக்கான, நவீன ஆடை அணிகளா? பட்டுப்புடைவைகளா, குர்தாக்களா, உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!



SIVA ASIAN MARKT, Zweibrueer Str. 3, 66424 Homburg (Saar), Germany

## உரிமை



மழை.

தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரலெழுப்பின.

குளத்தில் இருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது:-

'இப்படிக் கத்துகிறீர்களே - உங்கள் குரலைக் கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்துவிட்டால் உங்கள் நிலை என்ன ஆவது?'

தவளைகள் சிரித்தன.

'நாங்கள் கொஞ்சமும் கவலைப்படமாட்டோம்' என்றது கூட்டத்தில் ஒரு தவளை.

இன்னொரு தவளை சொன்னது:-

'மூச்சை இழக்கலாம்
பேச்சை இழக்கலாமா?'

# இளைஞனின் டயறிக் குறிப்புகள்

## தொகுத்துத் தருபவர்: நாடோடி

23.5.96 - Ferry என்று சொல்லப் படும் கடவைப்படகில் அளவுக்கு மீறி பயணிகள் ஏற்றிச்செல்லப்பட் டதால் தன்சேனியாவின் விக் டோரியா ஏரியில் படகு நீரில் மூழ்கி 549 பேர் உயிரிழந்தார்கள். 114 பேர் உயிர் தப்பினார்கள்.
ஒரு வட கொரிய பைலட் Mig-19 ரக சோவியற் விமானத்துடன் தென்கொரியாவில் சரணடைந் தார். சரணடைந்திருப்பவர் வட கொரிய விமானப்படையின் காப் டனாவார்.

24.5.96- வடமேற்கு பங்களாதே ஷின் ஜமுனா நதியில் கடவைப் படகும் Launch எனப்படும் இன் னொரு படகும் மோதிக்கொண்ட தால் 50 பேர் நதியில் மூழ்கி இறந்தார்கர்.
அல்ஜீரியாவில் இந்து முன்பு கடத்திவந்த 7 பிரெஞ் மதகுருமார் களின் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டதாக ஒரு இஸ்லா மிய இராணுவ அமைப்பு மோரோக்கோ வானொலியில் அறிவித்திருக்கின்றது.

25.5.96- லஞ்ச ஊழல் சந்தேகத் தின் பேரில் இத்தாலியில் பிரபல யமான 127 அரசியல் புள்ளிகள் இன்று பொலிசாரால் கைது செய் யப்பட்டனர்.
ஐரோப்பாவின் மிகவறிய நாடான அல்பானியாவில் நாளை தேர்தல் நடாத்தப்போவதாக அறிவிக்கப் பட்டது. பசுக்களை கொல்வதைத் தடைசெய்ய வேண்டும் என்று இந் திய பார்லிமண்டில் எழுப்பட்ட பிரேரணை, அங்கு பெரிய குழப் பத்தை உண்டுபண்ணியிருக்கி றது.

26.5.96- அல்ஜீரிய முஸ்லீம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட 7 மதகுருக்களுக்காக, பிரான்ஸ்-நாடு முழுவதும் உள்ள 40,000 ஆலயமணிகளை ஒலித்து துக்கம் அனுஷ்டித்தது.
கிரேக்க நாட்டின் ஒருபகுதியான சைப்பிரஸ் பார்லிமண்ட் தேர்தல் கள் இடம்பெறுகின்றன. 56 ஆசனங்களுக்காக போட்டியிடு கின்றார்கள்.
அல்பானியாவின் 22 மில்லியன் குடிமக்கள் இன்று, அவர்களு டைய மூன்றாவது சுதந்திரத் தேர் தலில் வாக்களித்தார்கள்.
முடிக்குரிய இளவரசர் வில்லியம் (13 வயது) தனக்கு முடியேற்க விருப்பமில்லை என்று அறிவித் தது, பிரிட்டனின் அரசகுடும் பத்தை அதிர வைத்துள்ளது.

27.5.96- அல்பானியாவின் ஆளும் ஜனநாயகக்கட்சி 60 வீத மான வாக்குகளை தாம் கைப் பற்றி விடுவோம் என்று நம் பிக்கை தெரிவிக்கின்றது.
கல்யாண வீட்டுக்கு விருந்தாளி களாக வந்த 25 பேர் ரயில்வேக டவையடியில் ரயிலோடு மோதிக் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்தி யாவின் உத்திரப்பிரதேச மாவட் டத்திலேயே இவ்விபத்து நடந் தது.
செச்சின் புரட்சிவாதிகளும் ருஷ்ய ஜனாதிபதியும் பேச்சு வார்த்தைகளில் இறங்கப்போவ தாக அறிவித்துள்ளார்கள். இவ் வருடத்தின் முதலாவது பேச்சு வார்த்தை முயற்சி இது.

28.5.96- இந்திய ஐக்கிய முன் னணி இடதுசாரிக்கட்சிப் பிரமு கரான தேவகவுடா புதிய அரசை அமைக்கும்படி ஜனாதிபதியினால் கேட்கப்படுகின்றார். புதிய பிரத மர் வாஜ்பாய் ஆட்சியிலிருந்து விலகுகிறார்.
ருஷ்ய ஜனாதிபதி செச்சினியா விற்கு பறந்து சென்று புரட்சிவா திகளுடன் பேச்சு நடத்தி சரித் திரம் படைத்துள்ளார்.

29.5.96- தீபெத்திய தீவிரவாதி களை ஜூன் 30 க்கு முன்பு சர ணடையும்படி சீனஅதிகாரிகள் அறிக்கை விடுத்துள்ளனர்.
தென்கொரியா ஆட்சியை கைப் பற்ற வட கொரிய அதிபரிடம் ஒரு யுத்த திட்டம் இருந்தது என்று சரணடைந்த விமான காப்டன் கூறினார்.

30.5.96- இஸ்ரவேலில் 98.6 வீதமான வாக்குகள் எண்ணப் பட்டு விட்டநிலையில் Benjamin Netanyahu முன்னணியில் நிற்பது தெரிகின்றது.
சீனாவும் அமெரிக்காவும் ஜூன் 6,7 இல் வர்த்தக பேச்சுவார்த் தைகளில் இறங்கப்போவதாக கூறுகின்றார்கள்.
இலங்கையில் தொடரும் இரண் டாவது நாள் வேலை நிறுத்தம், தண்ணீர், மின்சார விநியோ கத்தை மேலும் மோசமானதாக் கியது.

31.5.96- இஸ்ரவேலின் புதிய பிரதமர் பெஞ்சமின்தான் என்பது தீர்மானமாகத் தெரிகின்றது.
ஏழு வருடங்களின் பின் ஜம்மு காஷ்மீரில் நடக்கும் தேர்தலின் கடைசி நாளான இன்று நிகழ்ந்த வன்முறைச்சம்பவங்களில் நால் வர் கொல்லப்பட்டனர்.
மிகச்சிறந்த ஒரு வடகொரிய விஞ்ஞானி ஒருவரும் தென்கொ ரியாவில் அரசியல் தஞ்சம் கோருகின்றனர்.

1.6.96- 505 வீத வாக்குகள் பெற் றுள்ள LIKUID இஸ்ரவேலின் புதிய பிரதமர் என்பது இன்று உறுதிப் படுத்தப்பட்டது.
கடந்த நவம்பரில் சவுதியின் தலைநகரான றியாட்டில் நடந்த குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் நால்வர் குற்றவாளிகளாக காணப் பட்டு, இன்று சிரச்சேதம் செய் யப்பட்டார்கள்.

2.6.96- செச்சினியாவின் தலை நகரில் வெடிக்கும் குண்டு, இரா ணுவ வாகனம் ஒன்றைச் சித டித்து நான்கு சிப்பாய்களைக் கொன்றதோடு, ருஷ்யாவுடனான சமாதானப்பேச்சுவார்த்தையையும் சிதறடித்தது.
செக் பார்லிமெண்டின் பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி VACL-AV இன் ஆளும் கட்சிக்கு 29,6 வீதமான வாக்குகள் கிடைக்கின் றன.
மீண்டும் இடம்பெற்ற ஒரு துப்பாக் கிச்சூட்டுச் சம்பவத்தில், டார் வின் நகர் அருகே நான்கு பொலிசாரும் ஒரு பாதசாரியும் காயப்பட்டார்கள்.

3.6.96- கெய்ரோவின் பாதாள ரயில் நிலையமொன்றை குண்டு வைத்து தகர்க்க திட்டமிட்ட குற் றத்திற்காக, 6 முஸ்லீம் தீவிரவா திகளி இராணுவ நீதிமன்றத்தால் தூக்கிலடப்படுகின்றார்கள்.
அயர்லாந்தின் பிரயாண ஏஜன்சி ஒன்றுக்கு வெளியே நள்ளிரவு கடந்த வேளையில் பாரிய கார்க் குண்டு வெடிப்பு ஒன்று சம்பவித் தது.

4.6.96- ஹாவாய் தீவை அண்டிய பிராந்தியத்தில் கடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஜப்பானிய கடற் படை யுத்தக்கப்பல், தவறுதலாக அமெரிக்க யுத்தவிமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியது.
ஐரோப்பாவின் ஆளில்லாத விண் வெளிக்கலம் ARIANE-5 கட்டுப் பாட்டை மீறி வழிமாறியதால், 13, 120 அடி உயரத்தில் வெடித்து சிதற வைக்கப்பட்டது.
இரண்டாவது உலக மகாயுத்தத் தின் போது ஜப்பானிய இராணு வத்தின் விபச்சாரிகளாக கட மையாற்றிய 200,000 பெண்க ளுக்கு குறைந்த பட்சம் ஆளுக்கு 18,300 டாலர்கள் வரை கொடுக் கப்போவதாக ஜப்பானிய அரசு தீர்மானித்துள்ளது.
ஆபிரிக்க நாடான புருண்டியில், உள்நாட்டுக்கலவரத்தின் போது நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் 3 சுவிஸ் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் கொல்லப்பட்டார்கள்.

5.6.96- 3 சக ஊழியர்கள் கொல் லப்பட்டதால் புறுண்டிக்கான சகல உதவிகளையும் செஞ்சிலு வைச்சங்கள் இடைநிறுத்தம் செய் தது.

# ஜீன்ஸ் பிறந்த கதை!



முதன் முதலாக லெவிஸ்ட்ராஸ் என்பவர்தான் ஜீன்சை அறிமுகப்படுத்தினார். 1950–ல் ஒரு சுரங்கத்தொழிலாளிக்கு, பழைய கிழிந்த கான்வாஸ் துணியைத் தைத்து 'ஜீன்ஸ்' என்ற பெயரில் அவர் கொடுத்தார் . ஆறு டாலர்கள் தான் அதன் விலை.

ஐரோப்பாவில் பிறந்த லெவி, பிழைப்பதற்காக அமெரிக்காவிற்கு வந்தார். மிச்சமிருந்த கான்வாஸ் துணிகளை வாரிச் சுருட்டிக் கொண்டு சான்ஃபிரான்ஸிஸ் கோவிற்கு அவர் வந்தார். தெருக்களில் தற்காலிகமாய் கூடாரங்களை அமைக்க அந்தக் கான்வாஸ் துணிகள் பயன் படுமென்று லெவி நினைத்துக் கொண்டு வந்தார்.

ஒரு தொழிலாளியோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவர் சுரங்கத்தில் முரட்டுத்தனமாய் வேலை செய்யும்போது, கிழியாமலிருக்குமாறு ஒரு பேண்ட் தேவையென்று சொன்னார். லெவிஸ்ட்ராஸ், தம்மிடமிருந்த கான்வாஸ் துணியில் பேண்ட் தைத்துக் கொடுத்தார்.

லெவிக்குக் கிராக்கிகள் மேலும் மேலும் வந்து மோதின. கையிலிருந்த கான்வாஸ் துணியெல்லாம் தீர்ந்து போயிற்று. ஃப்ரான்சிலுள்ள நிமெஸ் என்று ஊரில் தயாரிக்கப்படும் 'செர்ஜெ டெ நிமெஸ், என்ற முரட்டுப் பருத்தித் துணியைப் பயன்படுத்தத் தொடங்கினார். இப்படியாக ஜீன்சில் ஒரு வகைக்கு 'டெனிம்ஸ்' என்று பெயர் வந்தது. இத்தாலியில் உள்ள ஜெனோவா என்ற ஊரில், லெவி பயன்படுத்திய கான்வாஸ் போன்று வேறுவகை துணி தயாரிக்கப்படுகிறது. அதிலிருந்து 'ஜீன்ஸ்' என்ற பெயர் வந்தது.

லெவியோடு டேவிஸ் என்ற தையற்காரர் சேர்ந்தார். இருவரும் சேர்ந்து ஜீன்சை முரட்டுத்தனமாக இருக்குமாறு 'இம்ப்ரூவ்' செய்தார்கள்!

இன்று லெவிஸ் ஸ்டுருவாஸ் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ஜீன்ஸ் பேண்டுகளைத் தயாரிக்கிறது. உலகெங்கும் முப்பத்தைந்து நாடுகளில் அந்த நிறுவனத்தின் கிளைகள் ஐம்பது உள்ளன. அதில் இருபத்திரண்டாயிரம் பேர் வேலைசெய்கிறார்கள்! இன்று துணிதுவைக்காத சோம்பேறிகளுக்கு மட்டுமல்ல, பெரிய புத்திசாலிகளுக்கும் அடையாளச் சின்னமாக 'ஜீன்ஸ்' மாறி விட்டது!

# இளைஞர் களம்!

# 'ரிஸ்க்' எடுக்க பயப்படும் புலம்பெயர் இளைஞர்கள்!

பெண்ணுக்கு திருமண வயசு 18 ம், ஆணுக்கு 21 ம் என்று சட்டம் சொல்லுகின்றது. ஆனால், அகதியாக புலம்பெயர்ந்த ஈழத்து இளைஞர்கள் பலருக்கோ 30 -35 கடந்து வயசோ வட்டுக்குள் போய்க்கொண்டிருக்கிறது.

தமிழ்ஈழத்தில், அகதியாக இந்தியாவில் வாழ்ந்து வரும் பெண்களின் வயதும், மணமகன் தட்டுப்பாட்டால் 30 வயதைத் தாண்டிக் கொண்டிருக்கிறது.

ஜேர்மனியில் ஓர் நகரத்தில் மனநோயாளிகள் மருத்துவமனையொன்றில் கிட்டத்தட்ட 35, 40 இளைஞர்கள் வரை மனநோயால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குக்கெல்லாம் வயது 25 லிருந்து 40 தான் ஆகிறது.

இவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் சொல்கிறார்: குறிப்பிட்ட காலத்தில் இவர்கள் திருமணம் செய்து கொள்ளாமையும், ஓர் பெண்ணின் அரவணைப்பு இவர்களுக்கு அமையாமையுமே காரணம் என்கிறார். உண்மைதான்!

அன்மையில் ஒரு புத்தகத்திலே படித்தது: 'உங்களுக்கு உங்கள் பெற்றோர் தந்த இந்தப்பிறவி என்ற கடனை அடைக்க, நீங்கள் யாருக்காவது பிறப்பைத் தர வேண்டும். நீங்கள் மகிழ ஓர் ஆணையோ பெண்ணையோ உங்களுக்கு ஒருவர் தந்தது போல் வேறு யாருக்காவது ஓர் ஆணையோ, பெண்ணையோ மண வாழ்க்கைக்கு நீங்கள் தந்தாக வேண்டும்'

இதற்கு இங்குள்ள இளைஞர்கள் 'மாட்டேன்' என்றா சொல்வார்கள்? ஆனால், வாழைப்பழத்தை உரித்து வாயில் யாராவது ஊட்டி விட மாட்டார்களா என்றுதான் காத்திருக்கிறார்கள்.

ஆம், எல்லோருமே இருந்த இடத்திலேயே தனக்கு எல்லாம் கிடைத்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இங்குள்ள இளைஞர்கள் தாங்கள் வாழும் நாட்டிலேயே தனக்கு ஒரு மங்கை கிடைத்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இங்கேயே திருமணத்தை முடித்துவிட்டால், பிரச்சனை இல்லை! இப்படித்தான் பல இளைஞர்கள் நினைக்கிறார்கள். அதனால்த்தான் இங்கே பெண்களுக்கு (மணமகள்) பலத்த தட்டுப்பாடாக இருக்கிறது போலும்.

இதில் முக்கியமாக பல இளைஞர்கள் 'ரிஸ்க்' எடுக்க பயப்படுகிறார்கள். இலங்கைக்கோ அல்லது இந்தியாவுக்கு சென்று இவர்களால் ஒரு திருமணத்தை முடிக்க முடியாதா? அல்லது ஐரோப்பிய நாட்டில் நல்ல விசாவுடனும், பணத்துடனும் வாழும் இவர்களால் ஒரு பெண்ணை 'பொன்சர்' பண்ணி இங்கழைக்க முடியாதா என்ன? 'இதுவெல்லாம் தலையிடி பிடித்த வேலை' என்று கூறிக் கொண்டு இதிலிருந்து தப்பிக்க பலர் தாங்கள் படிக்கும், வேலை செய்யும் இடங்களில் வெள்ளைக்கார பெணகளை அவசரப்பட்டு காதலித்து, அல்லல் பட்டு கல்யாணமும் செய்து கொள்கிறார்கள். இவர்களில் ஆயிரத்தில் ஒரு தம்பதிதான் ஒழுங்காக வாழ்கின்றார்கள் எனலாம். மற்றவர்களுக்கு எல்லாம் 6 மாதத்திற்கு மேல் நிலைத்து நின்றதில்லை இவர்களுடைய திருமண வாழ்க்கை.

இதனால் ஈழத்தில் வாழும் பல பெண்கள் மணமகன் தட்டுப்பாட்டால், பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இவர்கள் உணர்வதே கிடையாதா?

'குதிரையைக் கொண்டு போய் ஆற்றங்கரையில் விடலாமே தவிர, கழுத்தைப் பிடித்து தண்ணீர் பருக்க முடியாது!'

**-ரஞ்சினிப்பிரியன்-**

**'குதிரையைக் கொண்டுபோய் ஆற்றங்கரையில் விடலாமே தவிர, கழுத்தைப் பிடித்து தண்ணீர் பருக்க முடியாது!'**

# சங்கரி

(தொடர் நவீனம் - 13)

குஞ்சம்மா



சங்கரி சொன்னதைக் கேட்ட சுதாவுக்கு ரத்தம் கொதித்தது. குற்றம் செய் யாத ஒருவனைப் பிடித்து நீ குற்றம் செய்தவன் என்று பழி சுமத்தும் போது, அவ னுடைய மனம் விரக்திய டைந்து அதே குற்றத்தைச் செய்யச் சொல்லித் தூண் டும். அதே போலத் தான் சுதாவுக்குள்ளும் ஒரு நிமிடம் அந்த வெறி ஏற்பட்டது. "சங் கரி உங்களால வெளியில வர ஏலுமா?"

'ஓம் சுதா. இனி நான் இவ ருக்குப் பயப்படப் போற தில்லே. நான் ஒரு பிழையும் செய்யாத போது பிறகு ஏன் இவருக்குப் பயந்து பயந்து சாகவேணும்? நான் வாறன் வெளியால. எனக்கும் உங்க ளைப் பார்த்து உங்களோட கதைக்க வேணும் போல கிடக்கு."

"அப்ப இன்னும் ஒரு அரை மணித்தியாலத்தால ஸ்ரேச னுக்கு வாங்கோ. நான் கொஞ்ச நேரம் லீவு போட் டுட்டு வாறன்" என்று சொல் லிவிட்டு ரெலிபோனை வைக் கிறான்.

சரியான நேரத்துக்கு சுதா வந்து இறங்கிய போது, சங் கரி அவனுக்காகக் காத்துக் கொண்டு இருந்தாள்.

"என்ன சங்கரி நான் லேட்டா வந்திட்டனே?"

"இல்லே இல்லே, நான்தான் நேரத்தோடயே வந்திட்டன்."

"சரி சங்கரி இப்ப என்ன முடிவு எடுத்திருக்கிறீங்கள்?"

"எனக்கு என்ன முடிவு எடுக் கிறதெண்டே தெரியேல்ல சுதா, நீங்கள் தான் எனக்கு ஒரே ஒரு ஆறுதல். உங்க ளுக்குத் தான் என்ர பிரச்ச னைகள் தெரியும். நீங்களே இதுக்கு ஒரு முடிவு சொல் லுங்கோ."

"சங்கரி இதில இப்ப நிண்டு கதைச்சுக் கொண்டு நிக்கிறது அவ்வளவு நல்லா இல்லே. எங்கயாவது போய் இருந்து கோப்பி குடிச்சுக் கொண்டு கதைப்பமே?."

ஓம் என்று சொன்ன சங்க ரியைக் கூட்டிக் கொண்டு ஒதுக்குப் புறமாய் இருந்த ஒரு ரெஸ்ரோரண்ட்டுக்குள் போய் இரண்டு கோப்பிக்கு சொல்லி விட்டு ஒரு ஒதுக் குப் புறமாய் போய் இருக்கி றார்கள்.

"இப்ப சொல்லுங்கோ சங் கரி. கண்ணனை விட்டுப் பிரிஞ்சா, உங்களால மூண்டு பிள்ளையளேயும் வைச்சுக் கொண்டு தனியாச் சமாளிக்க முடியுமே?"

"கஸ்ரந்தான் சுதா. ஆனா இனியும் இப்பிடி அடியும் உதையும் வாங்கிக்கொண்டு வாயை மூடிக் கொண்டு, அடுத்தவங்களுக்கு முன்னலை சிரிச்சுக் கொண்டு, உள் ளுக்க தினம் தினம் அழுது கொண்டு. இது நரக வாழ்க்கை சுதா. இந்த வாழ்க்கை இனி எனக்கு வேண்டாம் சுதா." சங்கரி யின் கண்கள் கலங்குகின் றன.

"சங்கரி என்னம்மா இது எப்ப பார்த்தாலும் கண் கலங்கிக் கொண்டு. உங்கட ஒவ் வொரு கஸ்ரத்திலயும் நான் பங்கெடுக்க வேணும் எண் டுதான் ஆசைப் படுறன். ஆனா இந்த உலகம் அதைப் புரிஞ்சு கொள்ளாது. எதைப் பற்றியும் எனக்குக் கவலே இல்லே சங்கரி. என்னலை என்ன செய்ய முடியும் எண்டு எதிர் பார்க்கிறீங்கள். அதைச் சொல்லுங்கோ சங் கரி. நிச்சயமா உங்களுக்காக அதைச் செய்யத் தயாரா இருக்கிறன்."

"முதலில எனக்கு கண்ண னிட்ட இருந்து விடுதலே வேணும். அதுக்குப் பிறகு எனக்கு வேற ஒரு வேலே தேடித் தர வேணும். பிறகு எங்கயாவது ஒரு வீடு எடுத் துத் தர வேணும். அதுக்குப் பிறகு நான் உங்களைத் தொந் தரவு செய்யேல்ல."

"என்ன சங்கரி உங்களுக்கு உதவி செய்யிறத நினேக்கும் போதே சந்தோஷமா இருக்கு. இதையெல்லாம்

தொடர்ச்சி 20 ம் பக்கம்...

# அர்த்தமற்ற இந்துமதம்

தொடர் – இரா.மோகனராஜா

"இளைஞன்" கழுத்தில் கத்தி வைத்துவிட்டான்.

ஏன் என்று கேட்டேன் போகிற போக்கைப்பார்த்தால் உனக்குத் தான் அதிக பக்கங்களை ஒதுக்க வேண்டும் போலிருக்கிறது. கட் டுரைக்கென்று ஒரு பகுதி, வாச கர்களின் விமர்சனங்களுக்கு பதில் எழுதுவதற்கென்று ஒரு பகுதி என்று உனக்குத்தர வெளிக் கிட்டால் தினமும் தபாற்பெட்டி நிறைந்து வழியும் மற்றைய வாச கர்களின் ஆக்கங்களை பிரசுரிக்க முடியாது பின்தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே, உனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே தொடரையும், பதிலையும் எழுது என்று சொன்ன இளைஞனின் கட்டளைக்கு கட் டுப்படுகின்றேன்.

கடந்த இதழில், ராஜா சிவகுமார் அவர்களினால், தலைப்பு தப்பு என்றும், கண்ணதாசனின் வாச கத்தையே மாற்றிவிட்டேன் என் றும் குறிப்பிட்டிருந்தார். உண் மைச்சொல்ல வேண்டுமானால் தலைப்பு வைத்ததில், என் கால்ச்செருப்பைக் கழற்றி கண் ணதாசனின் முகத்தில் அடித்த திருப்தி எனக்கு. கண்ணதாசன் ஒரு இலக்கிய-சினிமா விபச்சா ரக்காரன். கண்ணதாசனைக்கிழற வெளிக்கிட்டால் இளைஞனின் தணிக்கைக் கத்திரிக்கோலுக்குள் சிக்கவேண்டி வரும். அதை விடுங்கள்.

ஒரு சுற்றாடல் நெருக்கடி ஏற்பட்டு பரிதவிக்கும் நேரத்தில் அநேக தமிழர்களின் வாயிலிருந்து வரும் ஒரு வார்த்தை, தமிழரின் பிற விக்குணம். தமிழன் தானும் முன் னேற மாட்டான். மற்றவனையும் முன்னேறவிட மாட்டான். இந்த வார்த்தைப் பிரயோகத்தை பிர யோகிக்காத தமிழர் இல்லையென் றுதான் சொல்ல வேண்டும். ஏன்? தமிழரிடம் போட்டி, பொறாமை நிறைய உண்டாம். சூது, வஞ்ச கம் நிறைய உண்டாம். எப்படி?

பக்கத்து வீட்டுக்காரன் நல்லா இருந்தால்ப் பிடிக்காது. அவன் கெட்டு அழிந்து போனால்ச் சந் தோஷம். பக்கத்து வீட்டுக்காரி நகையோ, புடைவையோ வாங் கினால் எரிச்சல், கொறாண்மை. அவளுடைய நகை தொலைந்து விட்டது என்று கேள்விப்படும் போது 'லாட்டரி' அடித்த சந் தோஷம்.

இந்த விடயத்தில் வெள்ளைக்கா ரர்களைப் போற்றவேண்டும். அவர்கள் வசதிகேற்ப வாழப்பழ

தொடர்ச்சி 18 ம் பக்கம்...




ஜெர்மனியில் மலிவு கடை என்று மக்களால் அழைக்கப்படுவது..

ஆச்சி துணை

ஐயர், மணவறை, சோடனை, திருமண அழைப்பிதழ்கள், கமெரா போன்ற உங்கள் வைபவங்களுக்கான தேவைகளுக்கு நீங்கள் ஓடி, ஓடி அலையாமல் ஒரே இடத்தில் ஆலோசனையை மாத்திரமன்றி அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

AACHCHITHUNAI, Salinen str 1/1, 74177 Bad Friedrichshall, Germany, Tel & Fax: 07136/ 3921





## -வாசகர் உலகம்-

இதயம் கவர்ந்த இளைஞனே
இனிமை தரும் இளையவனே
மாதம் ஒன்றாய் பூப்பவனே
வாரம் ஒன்றாய் பூத்திடுவானா?

-ராஜா சிவகுமார், டியூறன்-

உங்கள் கனவு, நனவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லையுங்க! -இளைஞன்-

அன்புடையீர்,
'இளைஞன்' பத்திரிகை வாசகி (ரசிகை) ஆகிய நான் மாதம் மலர்ந்தவுடன், இளைஞனை ஓடோடிச் சென்று வாங்கி ஒன்றும் விடாமல் படித்து விட்டுத்தான் மறுவேலை!
-திருமதி. றாயினி, பிறேமன்-

கவனமுங்க அடுப்பில சோறு, கறி எரிந்திடப்போகுது! -இளைஞன்-

ஆசிரியருக்கு,
இத்துடன் இரண்டு கவிதை எழுதி அனுப்பியுள்ளேன். தாங்கள் எனது ஆக்கத்தைப் பிரசுரித்து ஊக்கம் தருவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.
-வரதன், பிறேமன்-

17 ம் பக்கம் பார்க்க! -இளைஞன்-

இளைஞனுக்கு,
ஏ. ஜே. ஞானேந்திரன் மிக அருமையான தேனி. உலகவலத்தில் தேன் சேர்த்து எமக்குத்தரும் அருங்கூடு. உலகவியல் கருத்துக்களை தரும் எண்ணத்தக்கவோர் உந்து அவர் வாழ்க, வரவேற்கின்றோம்.
வைகாசி இளைஞனில், பரந்த மனதால் கெட்ட பாவி என்று வண்ணை ஆனந்தன் வாயிலாக கக்கிய அமுத விசம் அருமை. என்றாலும், இன்றைய ஈழகளத்தில் பெருகும் குருதியையும் தொட்டு எழுதியிருக்கலாம். ஆளும் பொருளும் சுட்டபழம் தான்.
'யாதும் ஊரே யாவரும் கேளீர், தீதும் நன்றும் பிறர் தரவரா' என்ற அருமையான பாடலில் முதல்வரியை மட்டும் தமிழன் தூக்கித்திரிகிறான். மறுவரி நாம் ஆக்க வேண்டியதை கைவிட்டுவிட்டான் என்பது வேடிக்கையான விபரீதமெனலாம்.
பரராசசேகரம் அவர்களின் பழமொழிகள் பகுதியில், 'பந்திக்கு முந்து படைக்குப் பிந்து' என்பதற்கு இன்னுமோர் கருத்துண்டு பந்தி - யானைப்படை, படை -காலாட்படை மகாபாரதத்தில் வீட்மர் கர்ணனை காலாட்படைத் தளபதியாக்கியதற்கு கர்ணன் வெகுண்டு வீட்மர் இறக்கும்வரை களம் ஏக மறுத்து காலாட்படையை கேவலமாக வெறுத்தொதுக்கினான்.
-முரதூர். பழ. தியான்-

ஆசிரியருக்கு,
'இளைஞ'னில் ஆசிரியர் கருத்து, ஆசிரியர் பதில்கள் எல்லாம் அற்புதம். ஒவ்வொரு கேள்விக்கும் அறிவான பதில்கள். அனேக புத்தகங்களை வாசிக்கின்றீர்கள் - வாசித்திருக்கின்றீர்கள் என்பது தெரிகிறது.
-செ. ஜெயச்செல்வி, கனடா-

உண்மையாகவே ஆசிரியரின் பதில்கள் நன்றாகவா இருக்கின்றது? தங்கள் பாராட்டுதலுக்கு நன்றி! -இளைஞன்-

வானேறிப் பறந்து
வையகமேயெல்லாம்
பைந்தமிழ் வளர்க்கும்
இளைஞனே
இதழெல்லாம் தேன்தமிழே.

-வை. யோகேஸ்-

### வாசகர்களே!

இம்முறை 'ஐடியா ஐயாசாமி' உங்களை சந்திக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். ஐயாசாமி அவர்கள் விடுமுறைக்காக கனடா, அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ் என்று பல இடங்களுக்குச்சென்று எம்மவர்களை சந்தித்து வரவுள்ளதால், இம்முறை உங்களால் அவரைக்காண முடியவில்லை. அடுத்த இதழில் பல ஐடியாக்களுடன் உங்களை சந்திப்பார். -இளைஞன்-

## முக்கிய அறிவித்தல்!

ஐரோப்பாவில் வாழ்ந்து வரும் கண்ணன் - ரவி ஆகிய இருவரோடும் தொடர்பு கொள்ள சென்னையிலுள்ள (போரூர்) ராஜகோபால் விரும்புகிறார்.



உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:-
Mr. M. Rajagopal
40, Trunk Road
Porur
Madras 116



# சிரித்து இரன்

## யாருக்கு வைத்தியம்?

இருதய நோயாளி ஒருவருக்கு ஒரு கோடி ரூபா அதிர்ஷ்டலாபச்சீட்டின் மூலம் பரிசு கிடைத்தது. இந்தச்செய்தியை அந்த நோயாளிக்கு உடன் தெரியப்படுத்தினால், அவர் இன்ப அதிர்ச்சியினால் உடன் இறந்துவிடுவார் என அறிந்த உறவினர்கள் -குடும்ப டாக்டர் மூலம் தெரிவிக்க விரும்பினர். குடும்ப டாக்டர் அந்த நோயாளியிடம் கேட்டார் -உங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்? எனக் கேட்க அவரும் வீடு கட்டுவேன் என்றார். டாக்டர் மீண்டும் கேட்டார் உங்களுக்கு பத்து லட்சம் ரூபா விழுந்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்கும்போது அவர் சொன்னார் -எனது தேவைக்கு கார் வாங்குவேன் என்றார். டாக்டர் கேட்டார் - உங்களுக்கு ஒரு கோடி ரூபா பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டபோது அந்த நோயாளி கூறினார் - அதில் அரைவாசியை உங்களுக்குத் தந்து விடுவேன் எனக்கூற உடனே இன்ப அதிர்ச்சியில் இறந்து விட்டார் டாக்டர்!

-ம. உதயகுமார், திருநகர்-கிளிநொச்சி-

## செண்டிமண்ட் ஜோக்!

நடுத்தர வயது உள்ள ஒரு தம்பதியர் தங்கள் குடும்ப வைத்தியரிடம் வந்தார்கள். அந்த அம்மா அந்த குடும்ப வைத்தியரிடம் வினாவினார்: 'டாக்குத்தர் ஐயா, எங்கள் மகன் மண் அழைந்து மணல் வீடு கட்டி விளையாடுகிறான். அதால ஏதேனும் பிரச்சனையே என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்' என்றார்.

இதனைச்செவி மடுத்த வைத்தியர்: 'அதால ஒரு பிரச்சனையும் இல்லை. இது சகஜம் தானே' என்று பதில் அளித்தார்.

அதற்கு அந்த அம்மா 'நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம். எங்கள் மருமகள்கள் தான் விவாகரத்து கேட்கிறார்கள்! அது தான் கவலையாக இருக்கிறது' என்றார்.

வயதைக் கேட்காமல் பதில் அளித்தற்காக வைத்தியரும் மனம் வருந்தினார்.

-கற்கி, பிராங்பேர்ட்-

---

சிங்களப்பெண் 1: 2 ம் வகுப் போடை பிள்ளைகளை ஏன் நிறுத்தியிட்டாய்?

சிங்களப்பெண் 2: நம்ம அரசாங்கம் அதுக்கு மேலை படிச்சவங்களை இராணுவத்திலை சேராது போலை.

-குப்பிளான் வை. யோகேஸ்-

---

கணவன்: நான் இறந்துவிட்டால் நி என்ன செய்வாய்?

மனைவி: பிணம் நாறு முன் எரித்து விடுவேன்.

கணவன்: ???!!!...

-கீதாச்சந்திரன், சுவிஸ்-

## சிலோன் சின்னத்துரையும் ஐரோப்பா ஐயாத்துரையும்.

சி. சி: எங்கட சுந்தரத்தான் எல்லாரிட்டையும் விலாசமும் ரெலிபோன் நம்பரும் கேட்டு எழுதி வைக்கிறான். ஏதேனும் பத்திரிகை ஆரம்பிக்க போறான் போலகிடக்கு!

ஐ. ஐ: பத்திரிகை ஆரம்பிக்க விலாசம் எடுக்கவில்லை, தன்ர மகளின்ர கலியாண பத்திரிகை குடுக்கத்தான்!

சி. சி: ???!!!...

---

சி. சி: இந்தமுறை சரஸ்வதி பூசையின் போது 'ஆயுத பூஜை' கொண்டாடுகிற யோசினை இருக்கு.

ஐ. ஐ: ஊரிலை என்டால் செய்யிற தொழில்களின்ட ஆயுதங்களை வைச்சு பூஜை செய்யலாம். இங்க அப்படி என்ன ஆயுதம் இருக்கு வைச்சு பூஜை பண்ண...

சி. சி: ஏன் இலலை, தும்புத் தடி, கூவர்மிசின், வாளி இதுகளை வைச்சு ஆயுத பூஜை செய்யலாம் தானே.

---

## நகை(ச்)சுவை உண(ர்)வு


சி. சி: ஐரோப்பாவில் அகதியாய் இருக்கிற எங்கட சனத் திட்ட நகைச்சுவை உணர்வு இல்லாமல் போட்டுது.

ஐ. ஐ: எங்கட சனத்திட்ட இப்ப நல்ல நகைச்சுவை உணர்வு இருக்கு.

சி. சி: எதை வைச்சு உப்பிடி சொல்லுறியள்.


ஐ. ஐ: எங்கட பொம்பிளைய ளிட்ட தேயையானமட்டில் கிலோகணக்காய் நகை இருக்கு. ஆம்பிளையள் நல்ல பங்கு இறைச்சியும், விஸ்கியும் எடுத்து சுவையாய் சாப்பிடுவினம். நகையும் சுவையும் சேர்ந்துதானே இருக்கு. அதுதான் சொன்னனான்.

-ரவிசெல்லத்துரை-



உலகின் முதல் மொழியாம் தமிழைப் பேசும் முதல் மனிதக்கூட்டம் இன்று 32 நாடுகளில் வாழ்க்கையென்ற பெயரில் காலத்தையோட்டுகிறது. பாராண்டவன் பரதேசியாய்க் கிடக்கின்றான் என்பதே இதன் பொருள்.

# குற்றவாளிக் கூண்டில்



# பாரதி

ஆனால், ஈழமண்ணில் விழித்தது தமிழன் மட்டுமல்ல அவனது ஆன்மாவும் தான்! பேரறிஞர் அண்ணா ஒருமுறை "சும்மாயிருப்பது, சோம்பிக்கிடப்பது, இதுவென்னால் முடியுமாவென ஏங்கி நிற்பது, -இவை இளைஞர்கட்குப் பிடிக்காதது. எதையாவது செய்துவிடவேண்டும் என்ற ஆர்வத்துடிப்பே அவர்களிடம் விஞ்சிக்கிடக்கும்" எனக்கூறினார். ஆம்! அந்த நல்ல தமிழ்த்தலைவனின் வாக்கு பொய்த்திடவில்லை. அவ்வுணர்வு ஈழமண்ணில் விழித்து சிறகுவிரித்து ஏனைய 31 நாடுகளில் வாழும் தமிழனுக்கும் நிழல் கொடுக்கத் தயாராகி வருகிறது.

புறக்கணிப்பை வாழ்வின் சகல துறைகயிலும் கண்டதால், இன்று ஈழத்து இளம் தமிழன் எல்லாத்துறையிலும் தன் கால்களை ஆழமாகவே பதித்துக்கொள்கிறான்.

படை நடத்துவது மட்டும் அவன் வேலையாகவிருக்கவில்லை. ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம், ஓயுதல் செய்வோம், தலைசாயுதல் செய்வோம், உண்மைகள் சொல்வோம், பல வன்மைகள் செய்வோம் எனப்பல துறைகளிலும் விழிப்புபெற்ற அவன் கால் தடையம் ஆழமாகப்பதிகிறது. இதனால், இலக்கியத்திலும் சரி, சமகாலத்துப் பேரறிவாளரது படைப்புகளிலும் சரி ஆழ்ந்து தன் கால்களை வைத்துப்பார்க்கிறான். அப்போது "நறுக்"கென குத்தும் முள்ளும் அவனது ஆன்மாவையே நோகடிக்கிறது. இந்த வகையில் முன்னோர்கள் கூறினார்கள் என்பதற்காகப் பாரதியை அப்படியே கண்ணில் எடுத்து ஒத்திக் கொள்ள இன்றைய ஈழத்தமிழன் மறுக்கிறான். பாரதியிலும் ஆழமாகக் கால்களை புதைத்துக் கொள்கிறபோது குத்திடும் முள் அவன் ஆன்மாவையே காயப்படுத்திவிட்டதை உணர்கிறான்!

வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பது பண்புடையோர் செயலல்லவா? எனவேதான்

## உலக வரலாறுகளை நன்கு மதிப்பீடு செய்யக்கூடியவன் எனப்பெயர் பெற்ற பாரதிக்கு, ஈழத்தின் வரலாறு தெரியாமல் போனதின் காரணமென்ன?

வேறுபாடு கொண்ட நிலையிலும் அவனைப்போற்றவும் ஈழத்தமிழன் தயாராகவே நிற்கிறான். தவறுக்குத் தண்டனையும் திறமைக்குப் பாராட்டும் கொடுத்து செயற்பட பிடரி சிலிர்த்து எழுந்துவிட்டது ஈழம்! நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயென முது புலவன் நக்கீரன் முதற் தலைவனைப்பார்த்தே சுட்டுவிரலை நீட்டிட முடியுமாயின், பாட்டுக்கொரு புலவனென்றும், பழைய யுகத்தை அடித்துவிரட்டிவிட்டு புதிய யுகத்தை "வா" என்று கவிதையென்ற மாத்திரைக் கோலால் வரவழைத்த மேதையென்றும் போற்றப்படும் பாரதி மாபெரும் ஈழத்தமினத்தை தன் எண்ணப்படி சீறும் சிங்களத்திற்கு தாரை வார்த்துக் கொடுத்தற்காக குற்றவாளிக் கூண்டில் அவனையேற்றினால் எப்படிக் குற்றமாக முடியும்?

எதிர்காலத்தை நிகழ்காலத்தில் காட்டிடும் நிலைக்கண்ணாடி தான் ஒரு உண்மைக் கவிஞன் என அமெரிக்க கவிதையுலகின் வாடாமலரென வர்ணிக்கப்படும் வால்ட் வில்ட்மன் என்பான் ஒருமுறை கூறினான். அகலாபாத் பல்கலைக்கழக புகுமுகத்தேர்வில் தேறியும், காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பல்மொழிகள் கற்றும் தேறி, இந்திய சுதந்திரப் போரில் லோகமானியத்திலகர் போன்ற தீவிரவாத சுதந்திரத் தியாகிகள் பக்கம் நின்றே போராட்ட வீரன் ஒவ்வொருவன் கையிலும் ஆவேசக் கவிதைகள் என்ற ஈட்டியைக்கொடுத்து பறங்கியனை வெருண்டு, புறமுதுகிட்டு ஓடச்செய்த ஒரு புரட்சிப்புலவனுக்கு தமிழின வரலாறு தெரியாதா? ஈழத்தமிழனுக்கு தன் மரபுவழித் தாயகத்திலிருக்கும் ஆதிபத்திய உரிமை புரியாதா? தாயத்திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா" -என்றும் "தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" -என்றும் நாட்டுப்பற்றையும், மண்ணின் மதிப்பையும் ஊட்டியவனுக்கு, பிறப்புரிமையுடன் சொந்தமண்ணில் வாழும் ஈழத்தமிழனை, கூடையிலேற்றி கீரை விற்பவன் "கீரையோ கீரை"-யெனக்கூவி விற்பதுபோல் ஈழமண்ணை சிங்களவனுக்கு விற்பனை செய்யும் உரிமையை இவருக்கு யார் கொடுத்தார்கள்? உலகவரலாறுகளை நன்கு மதிப்பீடு செய்யக்கூடியவன் எனப் பெயர் பெற்றவனுக்கு ஈழத்தின் வரலாறு தெரியாமல் போனதின் மாயமென்ன?

எங்கோ 10, 000 மைல்களுக் கப்பால், ரஷ்சியாவில் புரட்சித்தீ எங்கும் பரவியது 1917ல். தீக்கம்பத்துடன் நெருப்பை உமிழும் கண்களுடன் எழுந்து நின்றான் மாமனிதன் லெனின்.


அன்று கருகிப்பொசுங்கியது ஜார் என்ற சர்வாதிகார வெறிகொண்ட அரக்கப்பரம்பரை. மறுநிமிடமே வானத்து நிலவாய்ப் பொதுவுடமை அரசு ஒளிவீசியது!

அப்போது இன்றுபோல் தொலை தொடர்பு சாதனங்களோ, போக்குவரத்து வசதிகளோ வளராத காலம். அந்த ரஷ்சியப்புரட்சியை முழுமையாய் புரிந்து கொள்ள முடியாத நிலையில் அப்புரட்சியைப்பற்றி

*தொடர்ச்சி 13 ம் பக்கம்...*




வண்ணை ஆனந்தன்



**இக்கட்டுரை ஈழப்பூர்வீக வரலாறு தொடக்கம் 1989 இல் நடந்த ஜெயவர்த்தனா -ராஜீவ் காந்தி ஒப்பந்த முறிவும், இந்திய படை வெளியேற்றம் வரையிலான ஒரு சுருக்க வரலாற்றை தொடர்கட்டுரையாகத் தருகிறார், ஏற்கனவே வாசகர்களுக்கு அறிமுகமான திரு. செல்லையா பரராசசேகரம். இவர் கடைசியாக இலங்கையில் யாழ்ப்பாணப்பிரிவின் செஞ்சிலுவைச் சங்கத்தில் பொறுப்புள்ள பதவிகளை வகுத்தவராவார். தற்பொழுது சென்னையில் வசிக்கும் இவர், வாசகர்களின் ஆக்கபூர்வமான அபிப்பிராயங்களை 'இளைஞன்' மூலம் எதிர்பார்க்கின்றார். தவறாது எம் தமிழரின் வரலாற்றை தொடர்ந்து வாசியுங்களேன்**

செ. பரராசசேகரம்



# ஈழப் பூர்வீக வரலாறு

அத்தியாயம் 1

## 'அம்மா! ஒரு புறம் கடல். மறு புறம் தமிழர்கள். எப்படியம்மா நான் இங்கு நிம்மதியாக கால்களை நீட்டி சுகமாக நித்திரை செய்வேன்?'

தமிழ் ஈழ விடுதலைப்போராட்டம் பற்றி ஆராயும் முன்னர் இலங்கையைப்பற்றி சில பூர்வீகச் சான்றுகளையும், காலத்திற்கு காலம் உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்ட தாக்கங்களையும் முன்னுரையாக குறிப்பிடுவது ஏற்புடையதாகும். சிங்கள மக்களின் வரலாற்றை சுறும் பாளி மொழி நூல் 'மகா வம்சம்' கி.மு. 483 முதல் கி.பி. 366 வரை உள்ள காலத்தை அடக்கியதொன்றாகும். இந்நூலின் இரண்டாம் பகுதியான 'குல வம்சம்' 1186 வரை ஆன வரலாற்றை தருகின்றது. இம் மகா வம்சம் இலங்கைக்கு விஜயன் என்பவனின் வருகை பற்றியும் கூறுகின்றது. ஏறக்குறைய இவன் சரிதையிலிருந்தே 'சிங்கள' மக்களின் வரலாறு கூறப்படுகின்றது. ஆனால், இவன் வருகைக்கு முன்னரே இயக்கர், நாகர் எனும் இரு இன மக்கள் இலங்கையில் வாழ்ந்து வந்தனர். இவ்விஜ இனத்தினரும் சைவ சமயத்தையே கைக்கொண்டனர். இவ்விஜயன் வட இந்தியாவின் சிங்கபுர என்னும் பகுதியை ஆண்ட சிங்கபாகுவின் மகனாவான். இவன் சொற்கேளா துஷ்டப்பிள்ளையாக இருந்ததால் தகப்பனாலேயே, அவனுடைய 700 தோழர்களுடன் லாலா என்னும் ஊரிலிருந்து நாடு கடத்தப் பட்டான். சொற்கேளா பிள்ளை குலத்திற்கீனம் என்று புறக்கணிக்கப்பட்டு கடலிலே தள்ளப்பட்டவனுக்கு இவ்விலங்கை நாடு தஞ்சம் கொடுத்தது. இவ் விஜயன் இலங்கையில் வடமேற்கில் தம்பப் பண்ணை என்ற செம்மண் நிலப் பரப்பான இடத்தை அடைந்து அதற்கண்மையில் ஏற்கனவே இருந்த இயக்கர் குல வம்சியாகிய குவேனி என்பவளை மணந்தான். இங்கனமே வரலாறுகளும் ஊகிதங்களும் உண்டாயினும் உண்மையான முதல் சிங்கள -தமிழ் வேற்றுமை உணர்வு என்பது இலங்கையை ஆண்ட எல்லாளன் என்னும் ஏலேல சிங்கன் அழைக்கப்பட்ட (சோழ) தமிழ் அரசனுக்கும், துட்டகெமுனு என்று அழைக்கப்பட்ட காமினி அபயன் என்பவனுக்கும் ஏற்பட்ட பகைமையே எனலாம். பின்னவன் மாயரட்டை என்ற இலங்கையின் ஒரு பகுதியை அரசாண்ட சிங்கள மன்னன் அவன் இருகால்களையும் முடக்கி நித்திரை செய்தானாம். அதைக்கண்ட தாய் அவனை நோக்கி ஏன் அப்படி படுக்கிறாய் என கேட்டதற்கு அவன்: 'அம்மா ஒரு புறம் கடல். மறு புறம் தமிழர்கள் எப்படி அம்மா நான் இங்கு இலகுவாக கால்களை நீட்டி சுகமாக நித்திரை செய்வேன் இத்தமிழர்களை விரட்டி அழித்தால் ஒழிய எப்படி அம்மா எனக்கு நித்திரை வரும்' என்று சொன்னானாம்.

மகாவம்சத்தில் வரும் இக்கதையை பொதுப்படுத்தி சிங்களப் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்களிலும், பாட்டுக்களிலும், பிள்ளைக்கு உணவு ஊட்டும் நேரங்களிலும் பூச்சாண்டி காட்டும் முகமாக தமிழன் வரப்போகின்றான் என்று பயங்காட்டும் வழக்கங்கள் இன்றும் சில சிங்கள குக் கிராமங்களில் இருக்கின்றன. ஆகையால் தமிழனுக்கு எதிரான இனவெறி, உணவு மூலமும், நித்திரை மூலமும், கல்வி மூலமும் மிகச்சிறிய வயதிலிருந்தே தூண்டி வளர்க்கப்பட்டன எனலாம்.

இலங்கையின் வரலாறுகளையும், சின்னங்களையும், அகழ்வாய்வுகளையும் வேறு சான்றுகளையும் பார்க்கின் இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்கள் என பிற்காலத்தில் அழைக்கப்பட்ட இந்திய வம்சத்தவர்களும் அரசோச்சி வந்தனர் என்றும் பெரும்பாலும் தமிழ் இராச்சியம் தற்போதைய தமிழ் ஈழம் எனக் கோரப்படும் பிரதேசம் என்றும் அதற்கு மேலாக இலங்கையின் சில மத்திய பகுதிகளையும் தமிழ் ஈழப்பிரதேசம் உள்ளடக்கியது என்பதும் புலனாகும்.

விபரமாக விளக்கம் கொடுக்க இக்கட்டுரை விரிவடையும் என்ற அச்சத்தால் கி.பி. 1505 இல் இருந்து 1947 ஆம் ஆண்டு வரையிலான அந்நிய அரசியல் பாங்கையாவது ஒரு சிறிதளவேனும் அறிவது மிகவும் அவசியமாகும். 1505 ஆம் ஆண்டிலேயே திசை தெரியாது தத்தளித்து கரைகண்ட போர்த்துக்கீசம் தனது படகில் இருந்த நண்பர்களுடன் இலங்கையின் தெற்கே காலடி வைத்தான் இத்தீவு வளம் பொருந்திய நாடு என்று கண்டு போர்த்துக்கல் நாட்டின் அரசுடன் தொடர்பு கொண்டு, இந்நாட்டின் பிரதான கரையோரங்களையும் கோட்டையில் இருந்த இராசதானியையும் கைப்பற்றி கத்தோலிக்க சமயத்தை பரப்பி கல்வி நிலையங்களை அமைத்து முத்துக்கள் பவளங்கள் யானைத்தந்தங்கள் போன்ற விலைமதிப்பான பொருட்களையும் ஏற்றுமதி செய்து ஏறக்குறைய 150 ஆண்டுகள் போர்த்துகீசர் ஆட்சி செய்தனர். பின்னர் ஒல்லாந்தர் இவர்களிடமிருந்து இலங்கையை கைப்பற்றி மேலும் 150 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

எனினும் 1796 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் ஒல்லாந்தரை போரில் வென்று இலங்கையில் அவர்களின் ஆதிக்கத்திலிருந்த இடங்களை கைப்பற்றினர். முன்னைய இரு நாட்டினரும் காட்டிய அக்கறை மட்டுமே பின்னவர்களாகிய ஆங்கிலேயருக்கும் இருந்தாலும் மலைப்பிரதேசமாகிய கண்டி பகுதியை மிகவும் கஷ்டம் அடைந்து வெற்றி கொண்டு, அங்கு ஆட்சி புரிந்த கடைசி மன்னனாகிய ஸ்ரீ விக்ரமராஜசிங்கனையும் தோற்கடித்து ஆங்காங்கே இலங்கையை மூன்று பிரிவுகளாக பிரித்து ஆட்சி புரிந்தனர்.

முழு சுதந்திரங்களையும் பெறும் முயற்சிகளாக தமிழர் சிங்களவர் ஒன்று சேர்ந்து தேசிய காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ், சிங்கள மகாசபா போன்ற அரசியல் ஸ்தாபனங்கள் மூலம் போராட்டங்களில் ஈடுபட்டனர். இப்போராட்டங்கள் யாவும் முறைப்பாடுகள் மூலமும், குரல் எழுப்புவதன் மூலமே அன்றி இன்றைய கட்டத்தைப் போல் ஆயுதம் ஏற்தியோ அல்லது சாத்வீக முறையிலோ அமையவில்லை.

1915 இல் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த கலகத்தை அக்கால பிரித்தானிய அரசாங்கத்தின் ஆட்சியாளர் பஞ்சாபிய படைகளைக் கொண்டு அடக்க முற்பட்டனர். ஒருதலைப்பட்சமாக நடந்த இப் படையினர் சிங்களவர் பலரைக் கொன்றொழித்தனர். சிங்களத் தலைவர்கள் செய்வதறியாது திகைத்தனர். இது முதலாம் மகாயுத்த காலத்தின் உட்சகட்டம். தமிழ் தலைவனாக இருந்த சேர். பொ. இராமநாதன் இலண்டனுக்கு பயணம் செய்து ஒருதலைப்பட்சமாக இருந்த ஆங்கில ஆளுநரை நீக்கச் செய்து சிங்களத் தலைவர்களை சிறையில் இருந்து விடுவித்து நீதி வழங்கச்

தொடர்ச்சி 22 ம் பக்கம்...



லக்கி ஏசியா சொப்

22 கரட் தங்க நகைகள், சாறி வகைகள், ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கானறெடிமேட் ஆடைகள், இலங்கை, இந்திய பத்திரிகைகள், கடலுணவுப்பொருட்கள், போன்ற உங்கள் அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்! உங்கள் திருமண வைபவங்களுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள், .காஸ் அடுப்புகள், றைஸ் குக்கர்கள் மற்றும் நம் நாட்டு உணவு வகைகளையும் ஓடர் முறையில் செய்து வழங்குபவர்கள்.

Schul str 2, 52353 Dueren, Germany, Tel & Fax: 02421/ 45840, Private: 01717571490

# குற்றவாளி...

அன்றைய தமிழக மணிக்கொடி எழுத்தாளர்கள் அரைவேக்காட்டுத்தனத்துடன் கொச்சைப்படுத்திக்கொண்டிருந்த வேளை, 'மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள். அங்கே ஆகா வென்றெழுந்தது பார் யுகப்புரட்சி, கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்...' என மிக நேர்த்தியாக, மிகச்சரியாக நேரிற் பார்த்தவன் கூறுவதிலும் ஒரு படி மேலாய் அந்த ருஷ்யப் புரட்சியைப்பாடி மகிழ்ந்த பாரதிக்கு நம்நாட்டு நவனத்தினசாமியும், ஆழிக்குமரன் ஆனந்தனும் நீந்திக்கடந்த பாக்கு நீரணைக்கு இப்பால் உள்ள ஈழம் பற்றிய வரலாற்று அறிவு சூனியமான மர்மம் என்ன?

'சிந்துநதி மீதிசை நிலவினிலே...' என்ற பாடலில் 'சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்...' என்றுமல்லவா பாடிவைத்தான் இந்தப்பாரதி. எம் தாய்த்திரு மண்ணை சிங்களத்தீவு என்று பாடி வைக்க இவன் யார்? சந்தம் அமையப்பாட இப்படி ஒரு சொல்லைப் போட்டுவிட்டான் என மன்னித்து விட்டாலும், செந்தமிழ்நாட்டைப் பாடும்போது, 'சிங்களம், புட்பகம், சாவகமாகிய தீவு பலவினுஞ் சென்றேறி தங்கள் புலிக்கொடி, மீன்கொடியும் நின்று சால்புறக்கண்டவர் தமிழ்நாடு' என்று மீண்டுமல்லவா பாடிவைத்து ஈழ மண்ணை மீண்டும், மீண்டும் சிங்களவனக்கு தூக்கிக்கொடுக்கிறான். தமிழின வரலாற்றை அறியாத அறிவுச்சூனியமாகிவிட்ட இவனை பாரதியார் தமிழ் இன சாதியார் என எந்த அறிவுடையோனும் போற்றிப் புகழ மாட்டான். பட்டினப்பாலை என்பது ஒரு முதற்சங்க காலத்து இலக்கியம். முதற்சங்ககாலமென்பது, கி.மு. 3000 முதல் கி.பி. 100 வரை உள்ள காலப்பரப்பாகும். இதைப்பாடிவைத்த சங்கத்துச் சான்றோர் கடிய நல்லூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர் பெருமகன், இப்பட்டினப்பாலை பாடிய காலத்திலேயே ஈழமண்ணின் பெயர் ஈழம் என்றே இருந்திருக்கிறது என்பதை சோழநாட்டில் ஒருமுறை உணவுப்பஞ்சம் ஏற்பட்டபோது, ஈழத்து உணவு சோழநாட்டில் துறைமுகத்தில் வந்திறங்கியதான குறிப்பொன்றை பட்டினப்பாலை தருகிறது தமிழ்ப்புலவனான பாரதிக்கு தமிழ் இலக்கிய அறிவு இல்லாதது, அதிர்ச்சியல்லவா தருகிறது!

சங்க இலக்கியம் படிக்காதவன் பாரதி என்று வேதனையுடன் ஒத்துக்கொண்டு, அவன் பாடல்களைப்புரட்டும் போது -

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு' - என்றும் அவன் பாடியதைப் படிக்க முடிகிறது. அந்த சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு சேரன், செங்குட்டுவன் சிலையெடுத்த விழாவிற்கு கடல் சூழ் இலங்கைக்கயவாகு மன்னன் வந்திருந்தாகவும் குறிப்புண்டே! இதையும் நான் படிக்கவில்லையென இந்தப்பாரதியார் கூறித்தப்பிவிட முடியுமா? சிலம்பைப்படித்ததால் அல்லவா 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எனப்பாட முடிந்தது அவனால்! பின் ஏன் ஈழத்தமிழனின் தாய்த்திருப் பூமியை சிங்களம் என எழுதி சிங்களவனுக்கு தாரை வார்த்துக்கொடுக்க முனைந்து நின்றான்? இவன் இந்தியச் சுதந்திரப்போரில் வெள்ளையனை விரட்ட கவிதையென்ற ஈட்டியை சுதந்திரப்போராட்ட வீரனிடம் கொடுக்கும்போது, சிங்களவனிடமும் சில ஈட்டிகளைக்கொடுத்து ஈழத்தமிழனின் நெஞ்சிலுமல்லவா வீச வைத்திருக்கிறான். இவனை எப்படிப் போற்றுவேன்? கம்பன் தமிழ் கவிச்சக்கரவர்த்தியென்றாலும், இன்றுவரை அவன் பண்டிதர்கள் மடிதனில் தூங்கிக்கொண்டிருக்க, பாரதி மட்டும் பாமரன் வீட்டுப்படலையைத்தட்டி அவனைத்தோழனாக்கி மகிழ்ந்ததால் பட்டிதொட்டியெங்கும் அவன் பெயரே கேட்கிறது. இதை மறுக்கவில்லை. இதனால்தான் பாரதிக்கென்றே ஒரு கவிமண்டலமே உருவாகியிருக்கிறது. இந்த கவிமண்டலத்தின் பாரதியின் வாரிசாக நிமிர்ந்து நிற்பவன் புரட்சிப்பாவலன் பாரதிதாசன் இந்த புதுவையின் புரட்சி மலர், பாரதி ஈழத் தமிழினத்துக்கு செய்த வஞ்சகத்துக்கு பிராயச்சித்தம் செய்வது போல,

'தென்றிசையைப் பார்க்கிறேன்,
என் சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெல்
லாம் பூரிக்குதடடா!
அன்றந்தலங்கையினை ஆண்ட
மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்
புகழை வைத்தான்...'

என இராவணனைப் பாடி மகிழ்கின்றான். பாரதிபோல் இவனும் விரும்பியிருந்தால் அன்றந்த சிங்களத்தை ஆண்ட மறத்தமிழன் எனப்பாடியிருக்கலாமே! பாரதிக்கு தாசனாய் இருந்தும் பாரதிவிட்ட வரலாற்றுத் தவறை பாவேந்தன் பாரதிதாசன் மனம் செய்ய மறுத்தாலே இலங்கையென்றே பாடி வைத்தான்!

அதிகம் ஏன், சீறும் சிங்களத்தார் முழு இலங்கைக்கும் புதிய அரசியற்சட்டத்தை 1972 ல் வரைந்த போது, சிங்களத்தில் இந்த நாடு சிறீலங்கா சமதர்மக் குடியரசு என்றும் தமிழில் இலங்கை சமதர்மக்குடியரசு என்றும் வழங்கப்படும் என்றுதான் எழுதிவைத்துள்ளனர். தமிழன் தன்னுரிமையை சிங்களவனே ஏற்றிருக்க சிங்களவனுக்கில்லாத ஆசையில் முழு நாட்டையும் சிங்களம் எனப்பாடிய பாரதியை தண்டிக்காமல் விடமுடியுமா?

நீண்டகாலமாக என் மனதில் தீயாக எரியும் வேதனை இது. நான் சிறையால் வெளிவந்த புதிதில் ஒருநாள் இலங்கை பாராளுமன்றக் கட்டிடத்தில் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்து, மறைந்த அமிர்தலிங்கம் அவர்களைக்காண சென்றிருந்தேன். அப்போது எதிர்பாராதவிதமாய் தமிழகத்தின் முதுபெரும் எழுத்தாளரும், நகைச்சுவை தொடரில் தனக்கென முத்திரையைப் பதித்துக்கொண்டவருமான உயர்திரு. - சா. விசுவநாதன் (சாவி) அவர்கள் தனது வார இதழின் தணையாசிரியர் ராணிமைந்தனுடன் அங்கு வந்தார். அப்போது திரு. சாவியுடன் எனக்குப்பழக்கமில்லை. சாவி அவர்களை அங்கு அழைத்து வந்தவர் கொழும்பின் பிரபல வர்த்தகப்பிரமுகரான திரு. ஷாஜகான். என்னைக்கண்டதும் திரு. ஷாஜகான் நலம் விசாரித்துவிட்டு என்னைப்பற்றி சாவி அவர்கட்கு எடுத்துக்கூறி விட சாவி அவர்கள் என்னை ஆரத்தழுவி பல விடையங்கள் பற்றி பேசினார். நான் பேச்சின் போது பாரதி ஈழத்தமிழனை அவமதித்து தமிழன் பொற்பூமியை சிங்களம் என எப்படிக் கூறமுனைந்தான் எனக்கண்டித்தேன். பதில் கூறமுடியாத சாவி அவர்கள் மௌனமாகவே இருந்தார். மறுவாரம் வெளிவந்த சாவி இதழில் வண்ணையை சந்தித்தேன். பாரதிமேல் பயங்கர குற்றச்சாட்டைத் தொடுத்தார் என எழுதியும் இருந்தார். இன்னும் என் வாதமெல்லாம், ஈழத்தமிழினத்தை அவமதித்தற்காக இந்தப்பாரதி தண்டிக்கப்பட வேண்டியவனே! பாமரர் நெஞ்சம்வரை தமிழை அழைத்துச்சென்ற அவன் பணிக்காக அவர் மேல் என்மனம் கருணை காட்டுவதால் கடுங்காவல் தண்டனை வழங்காமல் ஒத்திவைக்கப்பட்ட தண்டனை (SUS-PRENDED SENTENCE) வழங்கப்பட வேண்டும்.

வாசகர்கள் என்ற நீதிபதிகளே நீதியான தீர்ப்பு வழங்குங்கள்.

## பாடவிதானத்தில் உடலியல் கல்வியும் சேர்க்க முடிவு

*(கொழும்பு)*

***பாடசாலை பாடவிதானத்தில் உடலியல் கல்வியையும் சேர்த்துக்கொள்ள கல்விய மைச்சு முடிவு செய்துள்ளது. 1997-ம் ஆண்டு முதல் 10-ம் ஆண்டிற்கும் 1998-ம் ஆண்டு முதல் 11-ம் ஆண்டிற்கும் உடலியற்கல்வி ஒரு பாடமாக இருக்கும்.***

***இதற்கான பாடநெறி தேசிய கல்வி நிறுவனத்தின் வழி காட்டலுக்கமைய 1994-ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.***

***1998-ம் ஆண்டு முதல் உடலியல் கல்வி, கல்விப்பொதுத்தராதர (சாதரணதரம்) பரீட்சைக்கும் ஒரு பாடமாக இருக்கும்.***

## சிந்திக்க வைக்கும் சித்திரம்!

அசதியா தாயே!
இடம் பெயர்ந்து வந்ததனால்!
அவலங்கள் தீர்ந்திட
வந்திடுமே ஓர் திருநாள்!

புறப்பட்ட எம்வீரர்
புறங்காட்டி ஓடவில்லை
புலிவீரர் என்றும் தம்
கொள்கை நின்று சாய்வதில்லை!

உறங்காத கண்மணிகள்
உயிர்கொண்டு வாழ்வதெல்லாம்
உமைக்காக்க என்பது
உனக்குமா புரியவில்லை!

வடபுலத்தில் அமைதியென
வல்லூறின் பிதற்றலினை
நீயுமா நம்பிவிட்டாய்?
நெஞ்சுள்ளே வெம்புகின்றாய்!

விடியலின் கருக்கலிலே
விரைந்திவர் போவதெல்லாம்
விடிவிற்காய் தான் சற்றே
பொறுத்திரு தாயே நீ!



கவிதை: ஜெயச்செல்வி

**எதை கதைத்தாலும் சிலர், எல்லாம் மனம்- எல்லாம் மனம் தான் என்று கூறுகிறார்களே... தத்துவ ரீதியாக பதில் தாருங்கள்?**

-ராஜா சிவகுமார், Dueren-

ஒரு பெரிய எழுத்தாளர் (ஒரு போராட்டத்தின் போது) குண்டடி பட்டு வைத்தியசாலைக்கு வந்தார். காயத்தைப் பார்த்த வைத்தியர், "மயக்க மருந்து கொடுத்து சத்திர சிகிச்சை பண்ண வேண்டும்" என்றார்.

"மயக்க மருந்தெல்லாம் ஒன்றும் வேண்டாம். எனக்கு படிப்பதற்கு ஒரு புத்தகத்தை மட்டும் கொடுங்கள். நான் படித்துக் கொண்டிருக்கிறேன் நீங்கள் சத்திர சிகிச்சையை பண்ணுங்கள்" என்றார்.

"இல்லை, சிகிச்சை பண்ணும் போது வலி ஏற்படும்" என்றார் வைத்தியர்.

"பரவாயில்லை நான் படித்துக்கொண்டிருக்கிறேன். நீங்க உங்கள் பணியைச்செய்யுங்கள்" என்றார்.

அவர் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறார். இவங்க பாட்ல சிகிச்சை பண்ண ஆரம்பித்தார்கள். அவர் எந்த சத்தமும் போடாமல் படித்துக்கொண்டே இருந்தார். எல்லாம் முடிந்ததும், சிகிச்சை எல்லாம் வெற்றிகரமாக முடிந்தது என்று வைத்தியர்கள் சொன்னதும்... "சரி..." என்றுவிட்டு அவர்பாட்ல தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தார். வைத்தியர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். "சிகிச்சை பண்ணி குண்டை வெளியே எடுத்திருக்கிறோம். இந்த வலியை எப்படி தாங்கிக்கொண்டீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்: "மனசு எங்கே இருக்கிறதோ அதைப்பொறுத்துத்தான் உடம்பு நிலைமை. என் மனசு முழுவதும் புத்தகத்திலே இருந்தது. அதனாலே எனக்கு ஒன்றும் தெரியல." என்று சொன்னார்.

இதைத்தான் "எல்லாம் மனம் தான், மனம் தான்" என்று சொல்ல வேண்டும். ஆனால், இப்படிப்பட்ட மனம் நம்மவர்கள் மத்தியில் இருக்கிறதா? என்பது கேள்விக்குறியே!

---

## 'கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்'

வருடம் - 03
குழந்தை - 26
ஆடி - 1996




# உலகத்திலேயே அதிக தத்துவ நூல்களை உடைய மதம் எந்த மதம்?

**உலகத்திலேயே அதிக தத்துவ நூல்களை உடைய மதம் எந்த மதம்? தத்துவ ரீதி என்று... பொது கண்ணோட்டத்தில் பதில் தருக?**

-ராஜா சிவகுமார், Dueren-

அமைதியாகக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தது யானை.



தண்ணீரை விட்டு வெளியே வரும்படி அதற்கு உத்தரவு போட்டது எலி. "நான் குளிக்க வேண்டும். நீ வெளியே வா!" என்று.

யானை: இவ்வளவு பெரிய இடம் இருக்கிறது. ஏதாவது ஒரு மூலையில் நீ குளித்துக் கொள்ளலாமே, இவ்வளவு பெரிய என் உடம்பைத் தூக்கிக்கொண்டு நான் வெளியே வருவதும், மறுபடியும் குளிப்பதற்குக் குளத்திற்குள் புகுவதும் மிகவும் கடினமான காரியம்.

எலி: நீ வெளியே வந்துதான் ஆகவேண்டும்.

யானை சிரமப்பட்டு எழுந்து வெளியே வந்தது. அது கரையேறி வந்தவுடனே, எலி மறுபடியும், "நான் குளிக்கப் போவதில்லை. நீ போய்க் குளிக்கலாம்." என்றது.

அமைதியோடு திரும்பிச் சென்று குளத்தில் இறங்கியது யானை. பிறகு எலியைப் பார்த்து, "முதலில் நீ குளிப்பதற்காக வெளியே வரச் சொன்னாய். மறுபடியும் நீ போய்க் குளித்துக் கொள். நான் குளிக்கப் போவதில்லை, என்கிறாயே? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?"

எலி: எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. உன்னை முழுமையாகப் பார்த்த பிறகு என் சந்தேகம் தெளிந்தது.

யானை: அப்படியென்ன சந்தேகம்?

எலி: நீ என்னுடைய ஜட்டியைத் திருடிக் கொண்டிருக்கிறாய் என்று நினைத்தேன்.

(பின்குறிப்பு: இது ஒரு ஜென் புத்தகக் கதை. தத்துவம்: அளவிட முடியாத இறைவனைச் சிறியவர்களாகிய நாம் அளப்பதற்கு முயற்சி செய்கிறோம்.)

---

**கடவுள் இருக்கிறாரா? இருந்தால், ஈழத்தமிழர்கள் இப்படி இன்னல் படுவார்களா?**

-சுரேந்திரன், ஜேர்மனி-

தங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?
உங்கள் உடம்பில் உள்ள உயிரை நீங்கள் எப்போதாவது கண்ணால் கண்டதுண்டா?
கண்களால் காணப்படவில்லை என்பதால் கடவுள் இல்லை என்று கூறக்கூடாது.



நம் உடம்பில் உள்ள உயிரை காணப்படாமையால், நாம் உயிர் இல்லாதவர்கள் என்று கூறினால் உலகம் சிரிக்கும் அல்லவா? உடலில் உயிரும், உயிரில் இறையும் உறைகின்றன.

இப்படி திருமுருக வாரியார் சுமாமிகள் சொல்லியிருக்கிறார்.

---

**தமது செலவில் தமது உறவினர்களை இங்கு கூப்பிட்ட சிலர், காலம் முழுவதும் அவர்கள் தங்கள் அடிமையாகயிருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

-மதி சன்முகராஜா, டியூறன்-

உதவி என்பது எதையாவது

தொடர்ச்சி 22ம் பக்கம்...

*விவாதத்தில் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்களா? அப்போது உங்களுடன் விவாதம் செய்து தோல்வி கண்ட உங்களுடைய நண்பர் விரோதியாக மாறிவிடுவதை காண நேரிடும்.*
*-மில்டன் ரைட்-*

# இளைஞன் விவாத மேடை!

சாரா நடவடிக்கைகளுக்குத் தண்டனைகள் எழுதப்பட்டுள்ளனவா?
(நன்றி: 'TIME' இதழ், சுபமங்களா, தாயகம்)

நண்பா, மோகனராஜா!
நான் கிணற்றுத் தவளையா?
உண்மைதான். 'நானும்' கிணற்றுத் தவளைதான். ஆனால், என்னிடம் மலையின் உயரத்து 'தூள் பொருள் காட்டி' உண்டு. எனவே நான் மலையில் இருந்தாலென்ன, மடுவில் இருந்தாலென்ன, ஏன் குழாய்க்கிணற்றுக்குள் இருந்தாலும் எனக்கு அக்கம் பக்கம் தெரியும்.
தஸலீமா நஸரீனின் நூலுக்கு நான் குறுகிய வட்டம் போட்டேனா?
உண்மைதான் மன்னிக்கவும்.

**-ரமேஷ் வவுனியன்-**

## 'இஸ்லாமிய மத வெறியர்களினால் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்ட இந்துப் பெண்!'

** MY LIFE HAS BEEN TAKEN OVER BY A DEMONIC MAN HE WANTS TO OWN MY BODY! WHEN HE WISHES*
*(1987 ல் நஸ்ரீன் எழுதிய "திருமணம்" கவிதையிலிருந்து...)*



ளலாம்' எனும் இவரது கருத்துக்கள் பங்களாதேசில் பெரும் புயலையே கிளப்பியது.
பங்களா தேசில் இஸ்லாமியப் பெண்கள் உணவு அருந்தும் மேசையில் அமர அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் ஆண்கள் அருந்த மிஞ்சும் உணவுகளையே அவர்கள் அருந்த முடியும். முஸ்லீம் மதத்தவர்களின் இக் கேவலமான செயல்கள் பற்றியும் இஸ்லாமிய மதம் பெண்களின் மீது கொண்டிருக்கும் அடக்குமுறை பற்றியும், இஸ்லாமிய ஆண்களின் அடக்குமுறைகள் பற்றியும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் இது

### இஸ்லாமிய மதவெறியர்களும் தஸ்லீமா நஸ்ரீனும்

தஸ்லீமா நஸ்ரீன்
(TASLIMA NASTINE)
யார் இவர்?
இவர் பங்களா தேசத்தைச் சேர்ந்தவர். வயது 33. மருத்துவரான இவர் கவிஞரும், நாவலாசிரியரும் ஆவார்.
'ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமவுரிமை வேண்டும், முஸ்லீம் ஆண்களைப்போல முஸ்லீம் பெண்களும் திருமணம் செய்து கொள் வரை ஆறு நாவல்கள், ஆறு கவிதைத்தொகுதிகள், மூன்று கட்டுரைத் தொகுப்புகள் எழுதியுள்ளார்.
'நாட்கள் போகும் போது' என்ற சஞ்சிகையில் இவரது கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. இச்சஞ்சிகையின் ஆசிரியரான ஷாபிக் ரெஹ்மான் என்பவர் இவரை பங்களா தேசின் 'எலிசபெத் டெய்லர்' என்கிறார்.

### தஸ்லிமா நஸ்ரீனுக்கு இஸ்லாமிய மதவெறியர்களின் மரண தண்டனை!

'வெட்கம்' என்ற 69 பக்க நாவலை எழுதியதற்காகவே இவருக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகள் மரண தண்டனை வழங்கியுள்ளனர். இஸ்லாமியத் தீவிரவாதம் ஏற்கனவே 'சாலமான் றூஷ்டி'க்கு மரண தண்டனை வழங்கியது யாவரும் அறிந்ததே.
1993 இல் பங்களாதேஷ் அரசால் இவரது கடவுச்சீட்டும் பறிமுதல் செய்யப்பட்டது.
சர்வதேச எழுத்தாளர் நிறுவனமான 'PEN' உம், சர்வதேச மன்னிப்புச்சபையும் இவருக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளன. இருந்தும், இஸ்லாமிய தீவிரவாதிகளும், இஸ்லாமிய சிப்பாய்கள் சபையும் இவருக்கு மரண தண்டனை வழங்கியுள்ளன.

### தஸ்லீமா நஸ்ரீனுக்கு ஏன் மரண தண்டனை? "வெட்கம்" என்ன சொன்னது?

1992 மார்கழியில் இந்தியாவிலே அயோத்தி மசூதி இந்து தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டபோது, பங்களாதேசில் ஓர் இந்துக்குடும்பம் இஸ்லாமிய மத வெறியர்களினால் எப்படிச் சின்னாபின்னமாக்கப்பட்டது, என்பது பற்றியே 'வெட்கம்' எனும் நாவலில் எழுதப்பட்டுள்ளது.
'மசூதி இடிக்கப்பட்ட பின்னர், இஸ்லாமியத் தீவிரவாதிகள் பங்களாதேசில் உள்ள ஓர் இந்துப்பேராசிரியரின் வீட்டுக்குள் நுழைகின்றனர், இவரின் மகள்களில் ஒருத்தியை பலவந்தமாக மானபங்கம் செய்கின்றனர், அவள் இறந்து விடுகிறாள்'
* அண்ணல் நபியின் போதனைகள் இத்தகைய கொடூரங்களை ஆதரிக்கின்றனவா?
* இஸ்லாமிய தண்டனை முறைகளிலே இஸ்லாமிய தீவிரவாதம் அறிமுகப்படுத்துகின்ற ஞாயம்

### ஓர் இஸ்லாமியப் பெண் இந்துக்களுக்காக இரங்குவது தப்பா?

## விசனத்தனமான தலைப்பு!

ஒரு சில இந்து மதத்தவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு முழு இந்து மதத்தையுமே அர்த்தமற்றதாக்கும் இரா. மோகனராஜாவின் தலைப்பு விசனத்திற்குரியது. உலகில் ஏராளமான மதங்கள் உள்ளன. உலக மக்களில் பெரும்பாலானோர் ஏதோவொரு மதத்தவர்களாக இருக்கின்றார்கள். அத்தனை பேரும் அம்மதத்தின்படி நடப்பவர்களல்ல, இதற்கு ஒருசில இந்து சமயத்தவர்களும் விதிவிலக்கல்ல. ஆனால், இந்த ஒருசிலரை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களைப்பற்றி எழுதுவதற்கு எப்படி 'அர்த்தமற்ற இந்துமதம்' என்று தலைப்பு வைத்தார்.
'பாடு நிலாவே' என்று ஒரு திரைப் படத்திற்கு தலைப்பு வைத்தால் நிலவு இறங்கி வந்து பாட வேண்டுமா? தலைப்புக்கும் உட்கருவுக்கும் சம்பந்தம் இருந்துதான் ஆக வேண்டுமா என்ன?
உங்களது தலைப்பு உங்களது கட்டுரைக்கு பொருத்தமற்றது என்று நீங்களே ஒப்புக்கொள்கின்றீர்கள், அதுவும் எப்படி? ஒரு மதத்திற்கு கேவலம், சினிமாவின் தலைப்பை உதாரணம் காட்டியிருருக்கின்றீர்கள். அதாவது பொருத்தமற்றது என்று தெரிந்தும் அர்த்தமற்ற இந்துமதம் என்று தலைப்பு வைத்ததன் காரணம் என்ன?
இப்போது ஐரோப்பாவில் பலர் இறங்கியிருக்கிறார்கள், மதம் மாறியபின் தமது முந்தைய சமயத்தை நிந்திப்பதற்கு. நீங்கள் இன்னொரு வகை. தலைப்பு அர்த்தமற்றது என்று தெரிந்தும் இந்துசமயத்தை அர்த்தமற்றதாக்கியிருக்கின்றீர்கள். அதெப்படி தலைப்பை விட்டுவிட்டு உங்களது நியாயங்களுக்கு பதில் எழுதுவதா? உங்களது கட்டுரைக்கு பொருத்தமற்றது என்பதை நீங்களே ஒப்புக்கொண்டும் தலைப்பை மாற்றாதபோது, உங்களது கருத்துகளுக்கு பதில் சொல்வதில் அர்த்தமில்லை என உணர்கின்றேன்.

### 'இந்து மதத்திற்கு கேவலம், ஒரு சினிமாவின் தலைப்பையா உதாரணம் காட்ட வேண்டும்!'

மேலும் உங்கள் கவனத்திற்கு...
நீங்கள் வேறு மதங்களின் குறைபாடுகளைப்பற்றி எழுதப்போவதாக அறிந்தோம். ஆகவே, 'அடுத்த வீட்டு ஆட்டுக்குட்டி' என்று ஒரு மதத்தைப்பற்றியும் 'பக்கத்து வீட்டு பரமசிவம்' என்ற தலைப்பில் இன்னொரு சமயத்தவர்களைப்பற்றியும் எழுதுங்கள் யாரும் ஏன் இப்படி தலைப்பு வைத்தீர்கள் என்று நிச்சயமாக கேட்கமாட்டார்கள்.

அப்படிக்கேட்டால் தலைப்புக்கும் உட்கருவுக்கும் சம்பந்தம் இருந்து தான் ஆகவேண்டுமா என்ன? பாடு நிலாவே என்று...

-மதி சன்முகராஜா, DUEREN-

## உட்கருத்துக்களின் வெளிப்பாடே 'தலைப்பு'

**'சில விடயங்களுக்கு நாம் தலைப்பிடுவது, தலைப்பு ஒன்று வேண்டும் என்பதற்கே. சில விடயங்களுக்கு நாம் தலைப்பிடுவது தலைப்பைத் தகுதிப்படுத்தவே!'**

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

**இளைஞன் இந்த மாத சிறுகதை**

கருணா பாரீஸ் வந்து மூன்று வருடத்தில் தன் நண்பர்களை அழைத்து எந்தக் கொண்டாட்டமும் செய்ததில்லை. அடிக்கடி நண்பர்கள் பிறந்தநாள் பார்ட்டி அது இது என்று அழைத்தாலும் கொண்டு வந்த பரிசுப்பொருட்களைக் கொடுத்துவிட்டு இன்னும் ஒரு மணித்தியாலத்தில் வேலை செய்கின்ற இடத்தில் நிற்கவேண்டும் என்று சொல்லிவிட்டு கிளம்பி விடுவான். அவர்கள் இனித்தானே பார்ட்டி தொடங்கப் போகிறார்கள். இரண்டு பெக் அடிச்சிட்டுப்போ என்றால், இல்லை மச்சான், என்னால தாங்கேலாது வேலைக்கு நிற்க வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான். எல்லோரும் பிறந்தநாள் பார்ட்டி வைக்கிறம் நீ எப்ப என்று கேட்டால், அக்கா வரவேணும். அக்கா வந்த பின் தான் என்னுடைய பார்ட்டி என்று உறுதியாகச்சொல்லி விடுவான். கருணா குடும்பச்பொறுப்பை உணர்ந்து நடக்கும் பிள்ளைகளின் வரிசையில் முதலாம் ஆள். அவன் போக்கும் தான் உண்டு. தன் வேலை உண்டு என்று இருந்தாலும் அவனது குணாதிசயம் உள்ள சில நண்பர்களும் அவனுக்கு இருக்கத்தான் செய்தார்கள். அவன் அருமையாக வைக்கிற முதலாவது கொண்டாட்டம். ஆகையால் அவன் அழைத்த நண்பர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

வத்சலா சைவ, அசைவ உணவுகளை ஏற்கனவே செய்து வைத்திருந்தாள். ஊரில் இருந்து அண்மையில் வந்ததனால் எல்லாம் ஊர்ச்சாப்பாடு போல் இயற்கையாக செய்திருந்தாள். கம கம என்று இருந்தது. வந்தவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வாசனை மூக்கைத்துளைத்தது. இத்தனை நாட்களும் தங்களுக்குத் தெரிந்த வகையில் ஏனோ தானோ என்று சமையல் செய்து சாப்பிட்டவர்களுக்கு, ஊரில் இருந்து வந்த வத்சலாவின் சமையல் எப்படி இருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. தங்களின் வயதிற்கு ஏற்றபடி அக்கா தங்கை என்று வத்சலா மேல் அன்பைக் கொட்டிக்கொண்டு இருந்தார்கள் வத்சலாவின் முகத்தில் ஆனந்தம் பொங்கி வழிந்தது. தம்பி கருணாவின் சபதம் நிறைவேறிய சந்தோஷம். கருணா நண்பர்களோடு அளவளாவுவதை வாஞ்சையோடு பார்த்துக்கொண்டு நின்றாள். நன்றிப் பெருக்கால் அவள் கண்கள் குளமாயின.

அவள் எண்ணங்கள் மூன்று வருடங்கள் பின்நோக்கிச்சென்று அசை போட்டன. சுரேஸ்சை உயிருக்குயிராய் காதலித்தமை. அண்ணன் ரமேஷ் விடுதலை இயக்கத்திற்குப்போய்விட்டான் என்பதால் தங்கள் குடும்பத்தை வெறுத்தொதுக்கியமை கவலை தாங்காது தம்பி கருணா சுரேஸ்சை நேருக்குநேர் கண்டு அக்காவை நீ காதலித்தது என்ன முடிவு என்று கேட்டதும், அதை அலட்சியம் பண்ணி நீங்கள் பயங்கரவாதிகள் உங்களோடு பழக எங்களுக்கு விருப்பமில்லை என்று சுரேஸ் கூறியது தம்பி கருணா அக்கா! இவங்கடை திமிருக்கு நான் வெளிநாடு போய் உழைத்து உன்னையும் கூப்பிடுவன், அவங்கள் வெட்கப்படக்கூடியதாக வாழவைப்பேன். அண்ணன் இயக்கத்திற்கு போனதும் நல்லது தான். நான் இனிக்குடும்பத்தைப் பார்க்கின்றேன். நீ எதுவும் யோசிக்காதை. அப்பா அம்மா கவலைப்படுவினம். இப்படி எல்லாம் அவள் நினைவிற்கு வந்தன.

இராஜேந்தர் குடும்பமும், துரைசிங்கத்தார் குடும்பமும் உறவுக்காரர். துரைசிங்கத்தார் மனைவி புனிதவதியாரின் போக்கு கொஞ்சம் ஆடம்பரமானது. பேசும் போது வேண்டுமென்றே ஆங்கிலத்தைக்கலந்து பேசுவதும், துரைசிங்கத்தார் கொழும்பில் பிறைவேற் கொம்பனி ஒன்றில் வேலை செய்து வந்தார். அதனால் அடிக்கடி கொழும்பு போவதும், கூட இருப்பவர்களோடு கொழும்புக்கதைதான். தேவையில்லாமல் அடிக்கடி ஆங்கிலத்தில் எடுத்துப் பேசுவார். அப்படி அவருக்கு வழக்கம். இவர்களின் ஒரே பிள்ளை சுரேஸ் பள்ளிக்கூடப்படிப்பை முடித்துக் கொண்டு சும்மா இருந்தார். சைக்கிள் ஒன்றோடு வாசிகசாலையின் முன் எப்பொழுதும் காணலாம். நல்ல ஊர் சுற்றி என்றால் மிகையில்லை. இராஜேந்திர மாஸ்டர் குடும்பம் இவர்கள் போக்குக்கு மாறானது. மாஸ்டர் மனைவி சுசிலா கோவில் பக்தி சிக்கனமாகச் செலவு செய்யும் குடும்பம். மூத்தவர் ரமேஷ் கொஞ்சம் துடியாட்டமானவன். அடுத்தது வத்சலா குடும்பப்பாசம் நிறைந்த பிள்ளை. தாயைப் போல் பக்தியும் அகத்தின் அழகு முகத்தில் தெரியும். அழகையும் ஆண்டவன் அள்கிக் கொடுத்திருந்தான். சாந்தமான தோற்றம். கடைசி கருணா வத்சலாவுக்கு ஏற்ற பாசமலர் சகோதரன். அதில் அண்ணன் தங்கை. இதில் அக்கா தம்பி அவ்வளவு தான் வித்தியாசம். ஊரில் உள்ளவர்கள் உதாரணத்திற்கு இராஜேந்திர மாஸ்டர் குடும்பத்தைப் பாருங்கோ. அவர் பிள்ளைகளைப் பாருங்கோ என்று சொல்லும் அளவுக்கு அந்தக்குடும்பத்தில் விசுவாசம் இருந்தது.

கருணா பாரீஸ் போய்விட்டது என்று கேள்விப்பட்டதுமே புனிதவதியாருக்கு பொறாமை மனதைக் குடைய தொடங்கி விட்டது. இன்று வத்சலாவையும் கருணா பாரீஸ் அழைத்து விட்டான் என்பது புனிதவதியாரின் பொறாமை பல மடங்காகி விட்டது. கையைப் பின்னுக்கு கட்டிக் கொண்டு விறாந்தையில் அங்கும் இங்குமாக உலாவிக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் அவமானமும் வெட்கமும் தாண்டவம் ஆடியது.

சைக்கிலைக் கொண்டுவந்து ஒழுங்காக நிறுத்தி வைக்கவும் நேரமில்லை சுரேசுக்கு. சுவரோடு சேர்த்து உருட்டி விட்டான். அது கீழே விழுந்தது. அதைப்பொருட்படுத்தாது மம்மி பசிக்குது சாப்பாடு என்று சொல்லிக்கொண்டு குசினிப்பக்கம் போனான். தாயார் புனிதவதியாருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஒருபுறம் கோபம் மறுபுறம் பரிதாபம். மகனை முறைத்துப்பார்த்தவர், 'சுரேஸ் நீ உன்ரை Fபியூச்சரைப்பற்றி யோசிக்காமல் ஊர் சுற்றுகிறாய். மற்றவர்கள் காரியத்தோட நடந்து கொள்ளுதுகள்' என்று எரிஞ்சு விழுந்தாள். சுரேஸ் ஒன்றும் நடக்காதது போல் 'வட் கப்பின்ட் மம்மி' என்றான். தாயார் தன் மனக்குமுறல்களைக் கொட்டவும், குனிந்த தலை நிமிராமல் நின்றான். 'ஓ கே! கம்' என்று சாப்பாட்டு மேசைக்கு அழைத்துச் சென்றவர், சாப்பாடு பரிமாறும் போது 'டோன்ற் வொறி சுரேஸ், யூ மஸ்டு கோ பாரீஸ்' என்றார் புனிதவதியார். அதற்கு சுரேஸ் அது எப்படி முடியும் என்பதுபோல் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு தாயாரை அண்ணாந்து பார்த்து 'அதற்கு மணி...' என்றான். 'காசு தேவை என்றால் கொழும்பில் ஒரு அநைக்ஸ் பார்த்து எடுக்கிறதுதான்' என்றார்.

'சரி ஏஜென்சியை தெரியாது என்ன செய்வது' என்று கேட்டான் சுரேஸ். 'அப்பாவுடைய Fபிறண்ட் ஜெயசூரியா Fபோறினுக்கு ஆட்களை அனுப்புகிறவராம். எப்படியும் ஐ மஸ் டு யூ டோன் வொறி. ஐ டோன்ற் Bபிலீவ்ட் ரமிழ்ஸ் கி இஸ் ஒனஸ்ற்.

சுரேஸ் வெளிநாடு செல்வதற்கு ஒத்துளைத்த சுரேசின் தந்தை துரைசிங்கம் ஒரு விஷயத்தில் மாத்திரம் குறுக்கிட்டார். ஜெயசூரியாவின் ஏஜெண்ட் பிரான்சில் நைஸ்நாலிற்றி உள்ள ஒரு கேள். ஆம் இங்கு வந்து சுரேஷை றிசிஸ்டர் செய்து விட்டு பின் பாரீஸ் போய் டொக்கிமன்ஸ அனுப்பி சுரேஷைக் சுப்பிட வேணுமாம். அப்படி செய்து விட்டால் திரும்ப றிசிஸ்டர் பண்ண முடியாது.

முதல் சுரேஸ் லவ் பண்ணின வத்சலா பாரீஸ் போய் விட்டாள். இப்ப பாத்திருக்கிற இடமும் முடியாமல் போய் விட்டால் என்ன செய்வது என்றார்.

அதற்கு தாயார் புனிதவதியாரின் பதில் சட்டென வந்தது. அது ஒரு Fபோமாட்டிக்குத்தானே. அடுத்த வீக் டிவோஸ் பண்ணலாம். அதை விடுங்கோ. துரைசிங்கத்தார் அமைதியானார்.

முன்பு சுரேஸ் வத்சலாவை காதலித்தான். வத்சலாவின் அண்ணன் ரமேஷ் இவ்வேளையில் இயக்கத்திற்கு சென்று விடவும் அதைச் சாட்டாக வைத்து சுரேசின் தாயார் காதலுக்கு மறுத்து விட்டார். சுரேசும் ரமேசும் ஒரு வயசுக்காரர். அவர்கள் இருவரும் சினேகிதமும் கூட. அதனால் சுரேசும் ரமேசோடு இயக்கத்திற்கு போய் விடுவான் என்ற பயம் தாயாருக்கு.

சுரேஸ் டொன் கோ தெயா எங்களை கொழும்பிலை ரெரோயிஸ்ற் என்று றெக்ஸ்பெக்ற் பண்ண மாட்டினம் ஒருவரும் என்று துள்ளி விழுந்தார் தாயார். சுரேஸ் மம்மிக்கு ஏற்றபடி ஆமாம் சாமி போட்டு காதலுக்கு முற்றுப் புள்ளி வைத்தார். இக்கதை மூன்று வருடத்தின் முன்பு நடந்த கதை.

தொடர்ச்சி 23 ம் பக்கம்...



# கவிதைகள் உலகம்

## உணரும் போது...

மாறுபட்ட
பரிமாணங்களில்
ஒவ்வொருவரும்
நிம்மதியை தொலைத்து
வேண்டாததை
தேடிக்கொண்டு

கோவிலும்
மசூதியும்
தேவாலயமும்
மன அழுக்கை கழுவ
திறந்தே இருப்பதால்
துன்பம் வரும்
சமயங்களில்
கண்ணீரால்
தூய்மையாகிறது

விஞ்ஞானம்
முன்னேறினாலும்
புயலும் பூகம்பமும்
சொல்லாமல் வந்து வோவது
உலகத்தை
வியக்க வைக்கிறது

தன்னை விடவும்
ஒரு சக்தி இருப்பதாக
உணரும் போது
வெற்றியும் தோல்வியும்
சகஜமாகி
பிறமனிதரை மதிக்கும்
பண்புடையவனாய்
அறிவுரைகளிலும்
போதனைகளாலும்
கிடைக்காத புனிதம்
மனிதனிடையில்
உருவாகிறது.

-மணிகண்டன், பிரான்ஸ்-

## நான் பிறந்த மண்

நான் பிறந்த மண்ணே
நான் தவழ்ந்த மண்ணே - உன்
மடி நனைக்கும்
இரத்தத்தின் மீது ஆணை - இனியும்
மனித கருதியில்
குளிக்கும் ஆசையை விட்டுவிடு
எம்மவர் இரத்தத்தின் மேல்
என் கால்களை பதிப்பதா - உன்
பிள்ளைகள் இரத்தம் - உன்
தாகத்தை தணிப்பதா? - உன்
உடலை எதிரிகள்
கால்கள் மிதிப்பதா?
புண்ணிய பூமியாக - நீ
மாறும் நாள் எப்போது!

-வண்ணை தெய்வம், பிரான்ஸ்-

## நாம் யார்

உக்கி உலர்ந்து
நக்கிப் பிழைக்கும்
நமக்கேன் விடுதலை?
அங்கே
வாலிபங்கள்
செத்துப் போகவா
போராட்டம்?
ஓ.....
விதையாகிப் போன
வித்துக்களே
விற்றுப் பிழைக்கும்
எங்கள்
உணர்வுகள் செத்துப் போயினவே!

-முரசூர். பழ. தியான். ஜேர்மனி-

வானில் பறக்குதம்மா குருவி
வாயால் கக்குதம்மா நெருப்பு
வயிற்றில் பிள்ளையோடு துடிக்கிறாளே தாய்
அவள் சாபம் தீண்டாதோ இவளை

-திருமதி. றாயினி, பிறேமன்-

## இளைஞனே...!

**இருபதாவது வயதில்
அழகாக இல்லாதவன்,
முப்பதாவது வயதில்
திடகாத்திரமாக
வாழாதவன்,
நாற்பதாவது வயதில்
அறிவாளியாக
இல்லாதவன்,
ஐம்பதாவது வயதில்
பணக்காரனாக
ஆகாதவன்
எதற்கும் சரியில்லாதவன்.**

-மெர்வின்-

## புசிக்கிறாளே மக்களை அங்கு

அவள் கைகூப்பி வாங்கினாள் ஓட்டு
அவள் பேச்சை நம்பி போட்டோமே ஓட்டு
அவள் இன்று காலால் உதைக்கிறாள் கேட்டு
அவளுக்கு நாம் வைக்கலோமோ வேட்டு

ஓட்டு போட்ட நம்மவரை
துண்டு போட்டு வீசிறாளே ஆற்றில்
பெண் உருவம் எடுத்து நின்று
பேய் போல் ஆடுறாளே ஆட்டம்
தான் ஆழ நினைக்கிறாள் இன்று யாரை கேட்டு
நாம் சும்மா விடுவோமா அவளை இன்று

பச்சை பசீர் என்ற எம்நாட்டை
படு சுடு காடு ஆக்கி விட்டாள் இன்று
பசிக்குத் தீன் இல்லையா அவளுக்கு அங்கு
புசிக்கிறாளே உயிரோடு மக்களை அங்கு

வெறிகொண்டு ஆடுறாள் ஆட்டம்
வெளிநாட்டு உதவி நாடி ஓடுறாள் ஓட்டம்
வெளிநாடு தேடுது தேட்டம்
வயதான குருவி நான்கை வாங்கி
எடுக்கிறாளே ஓட்டம்

## புத்தரே மீண்டும் பிறக்க நேர்ந்தால்...

புத்தரே உன் போதனைகள்
அரச மரம் போல் பரந்த
ஈழத்தில் உன்னவர்கள் செய்யும்
கொடுமைகளைக் கண்டுதான்
நீ - கண்களை இன்னும்
மூடிக்கொண்டிருக்கிறாயா?
புத்தம், சங்கம், தர்மம்
இன்று கொலை, களவு, கற்பழிப்பு
என்று மாறிவிட்ட ஈழத்தில்
புத்தரே நீ மீண்டும் இப்புவியில்
பிறக்க நேர்ந்தால்
இலங்கையில் மறந்தும் கூட
உனது புனிதப் பாதங்களைப்
பதித்து விடாதே.

-செட்டிகுளம் வரதன், பிறேமன்-

## ஓ...இளைஞனே...!

*இளமை...!*

***இது
சோதனைக் காலம்...
முயன்றால்
இதுதான்
சாதனைக்கு
களமும் கூட...!***

# செய்தி துளிகள்

## நண்பனை தின்ற ரஷியர்!

மாஸ்கோ.

அலெக்சாண்டர் மாஸ்லிச் என்ற ரஷிய சிறை கைதிக்கு ஜெயில் உணவு பிடிக்கவில்லை போலிருக்கிறது. இதனால் ஜெயிலில் தன்னோடு இருந்த சகா ஒருவரை கொன்று உடல் பாகங்களை சாப்பிட்டுவிட்டார். இதையடுத்து அவருக்கு சற்று விசேஷ பாதுகாப்பு செய்திருந்தார்கள். சம்பவத்தன்று மாஸ்லிச்சுக்கு மீண்டும் இதேபோல மனித மாமிச பசி ஏற்பட்டது. இதனால் போர்வையை பயன்படுத்தி ஜெயில் சகா ஒருவரின் கழுத்தை நெரித்து கொன்றுவிட்டார். பச்சையாக இறைச்சியை தின்பது காட்டுமிராண்டித்தனம் அல்லவா?. இதனால் ரப்பர் தண்ணீர் குழாயை எரித்து இறந்த கைதியின் கல்லீரலை அவித்து சூப் தயாரிக்க முயன்றார். ஆனால் சிறை அதிகாரிகள் பாதியில் வந்து சமையலை தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

## பூனைக்கு கிட்னி மாற்று ஆபரேசன்!

ஆர்சர்டுபார்க்.

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள 2 பூனைகளுக்கு ஒரு விசித்திரமான பிரச்சினை ஏற்பட்டது. ஸ்மோக்கி என்ற பூனைக்கு கிட்னி தேவை. மறுபுறமாக மற்றொரு பூனைக்கு வீடு இல்லை. இந்த குறையை ரோஸ் லிட்ஸ்மன் என்ற விலங்கு மருத்துவர் ஒரே சமயத்தில் தீர்த்து வைத்து விட்டார். தெரு பூனையின் கிட்னிகளில் ஒன்றை ஸ்மோக்கிக்கு ஆபரேசன் செய்து பொருத்தினார். ஸ்மோக்கியின் சொந்தக்காரர்கள் தெரு பூனையை தத்து எடுக்க சம்மதித்து விட்டார்கள். ஆபரேசன் சுமார் 5½ மணி நேரம் நடந்தது.

## ஜப்பானில் பட்டினி சாவு!

டோக்கியோ.

உலகின் முன்னணி பணக்கார நாடுகளில் ஒன்று ஜப்பான். இங்கே கூட பட்டினி சாவு சம்பவம் நடந்திருக்கிறது. அங்குள்ள 77 வயது பெண்மணி ஒருவரும், அவரது 41 வயது மகனும் ஒரு சிறிய அடுக்குமாடி வீட்டில் குடியிருந்தார்கள். ஒரு மாத காலமாக இவர்களது நடமாட்டத்தை காணவில்லை என்பதால் அக்கம் பக்கத்தவர்கள் சந்தேகப்பட்டு கதவை உடைத்து பார்த்தனர். உள்ளே சமையல் அறையில் தாயாரின் பிணம், வரவேற்பு அறையில் மகன் பிணம். சாவதற்கு முன் அந்த 77 வயது பெண்மணி டயரியில் எழுதி வைத்திருந்த வாசகங்கள் வருமாறு:-

எங்கள் கடைசி உணவு தீர்ந்துவிட்டது. நாளையில் இருந்து சாப்பிடுவதற்கு எதுவும் இல்லை. என் மகனோடு சேர்ந்து என்னை சாகவிடுங்கள்.

இவ்வாறு அந்த பெண்மணி எழுதியிருந்தார். இந்த சம்பவம் ஜப்பானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## சைகை மொழியால் தற்கொலையை தடுத்தவர்!

நியூயார்க்.

அமெரிக்க நகரமான நியூயார்க்கின் மன்ஹாட்டன் பகுதி. இங்கே உள்ள 32 மாடி கட்டிடத்தில் வின்சென்ட் மைகோலி என்ற நபர் ஏறி விட்டார். கட்டிட உச்சியில் நின்று கீழே குதித்து தற்கொலை செய்ய முயன்றார். போலீசாருக்கு இதுபற்றிய தகவல் கிடைத்ததும் உடனே விரைந்து வந்தனர். "வேண்டாம் குதிக்காதே" கீழே இறங்கு என்று கரடியாக கத்திப் பார்த்தார்கள். பயன் இல்லை.

அப்போதுதான் கட்டிட உச்சியில் நிற்பவர் காது கேளாதவர் என்ற விவரம் போலீசாருக்கு தெரியவந்தது. உடனே சைகை மொழி தெரிந்த போலீசார் யாராவது இருக்கிறார்களா? என்று விசாரித்தனர். கிடைத்தார் ஒரு பெண் போலீஸ். இவர் பெயர் லிஸ்குக். இவரது தம்பி கூட காது கேளாதவர் என்பதால் இவருக்கு சைகை மொழியில் நல்ல பரிச்சயம். ஆகவே மேலே இருப்பவரின் கவனத்தை கவர்ந்து அவருடன் சைகை மொழியில் பேசினார். உடனே தற்கொலைக்கு முயன்ற ஆசாமி மனம்மாறி கீழே இறங்கி விட்டார்.

## நாய்களுக்கு உணவாக மனித இறைச்சி!

மெல்போர்ன்.

ஆஸ்திரேலியா நாட்டின் தென்பகுதி தீவு டாஸ்மேனியா. ஆரம்பகாலத்தில் இங்கே அபார்ஜின் என்ற பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அங்கு புதிதாக குடியேறிய வெள்ளையர்களுக்கு இந்த பழங்குடி மக்களை பிடிக்கவில்லை. ஆகவே, காட்டுக்கு போய் இந்த பழங்குடி மக்களை வேட்டையாடி அவர்களது தலைகளை வீட்டு சுவரில் அலங்காரமாக மாட்டி வைத்தார்கள். உடல்களை வீட்டில் செல்லமாக வளர்க்கும் நாய்களுக்கு உணவாக பயன்படுத்தினார்கள்.

## சைக்கிள் ஓட்டிய பெண்மணிக்கு அடி-உதை!

டெகரான்.

பெண்கள் சைக்கிள் ஓட்டுவதை ஈரான் நாட்டில் சிலர் அநாகரிகமாக கருதி வருகிறார்கள். சம்பவத்தன்று ஈரான் தலைநகரம் டெகரானில் உள்ள சிட்கார் விளையாட்டு மைதானத்தில் ஒரு பெண்மணி சைக்கிள் ஓட்டினார். உடனே 'பசிக்' என்ற தீவிரவாத அமைப்பின் தொண்டர்கள் அங்கே குவிந்தார்கள். சைக்கிள் ஓட்டிய பெண்மணியை தடுத்து நிறுத்தி ஒரு கை பார்த்து விட்டார்கள். போலீசுக்கு இதுபற்றி தகவல் சென்றது. ஆனால் அவர்கள் இதை கண்டு கொள்ளவே இல்லையாம்.

## பத்திரிகையாளரின் 10 எதிரிகள்!

வாஷிங்டன்.

உலகிலேயே மிக ஆபத்தான தொழில் எது? குத்துச்சண்டை போட்டியில் நடுவராக வேலை பார்ப்பதுதான்.

இப்போது அதை விட அபாயகரமான தொழில் பத்திரிகை தொழில் என்பது தெரியவந்திருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களின் முக்கியமான எதிரிகள் 10 பேரை பட்டியல் போட்டு இருக்கிறது. இந்த பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் அல்ஜீரியா நாட்டு தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுஅப்துல் ரகுமான். 93-ம் ஆண்டில் இருந்து இவரது குழு 58 பத்திரிகையாளர்களை தீர்த்துக் கட்டி இருக்கிறது. இவருக்கு அடுத்தபடியாக சீனத்தலைவர் டெங், நைஜீரியா நாட்டு தலைவர் அபாச்சா ஆகியோரும் பட்டியலில் உள்ளனர்.

## அர்த்த...

கிக்கொண்டவர்கள். அவர்கள் மற்றவர்களைப்பார்த்து பொறாண்மைப்படுவது அரிது. நமது சமூகங்களில் மட்டும் ஏன் அப்படி? அதற்குக்காரணம் இந்துமதக் கதைகள்.

அவையெப்படியெனில்:

பிரம்மாவா, விஷ்ணுவா பெரியவன் என்ற போட்டி. சிவனா, காளியா பெரியவன் என்ற போட்டி. சரஸ்வதியா, இலக்குமியா, துர்க்கையா சிறந்தவள் என்ற போட்டி. முருகனுக்கும் பிள்ளையாருக்கும் மாம்பழம் தின்னப்போட்டி.

இதைவிட ஒருத்தரையொருத்தர் சண்டையிட வைக்கும் நாரதரின் சதி.

இப்படி ஏராளமான குப்பையில்ப் போட்டுக் கொழுத்தவேண்டிய இந்துமதக் கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் போது, அவர்கள் இதைப்படிக்கும் போது பொறாண்மை,

தொடர்ச்சி 22 ம் பக்கம்...




GERMANY
சேகர் ஆட்ஸ்
SEGAR ARTS
(Commercial Artist)

திருமண வாழ்த்து மடல்கள், விளம்பர அறிவிப்புப் பலகைகள், கோயில் திரைச் சேலைகள், உருவப் படங்கள், மற்றும் சகல விதமான ஓவிய வேலைகளுக்கும், திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் போன்ற சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்: தொலைபேசி: 069-704489

தொலைநகல்: 069-775669 (சனி ஞாயிறு தவிர்ந்த நாட்களில் மாலை 6 மணிக்குப் பின்னர்)






● சித்தமது தெளிவுடைய
குற்றமற்ற மனிதர்களே!
சத்தமிட்டுச் சொல்லுங்கள்
யுத்தமா? சமாதானமா?

● யுத்தமலை வெடிப்பதனால்
ரத்தவெறி பாய்வதனால்
வெற்றியென்று யாதுமில்லை
மனித உயிர்களுமோ மீதியில்லை

● சிவனவரும் புத்தரும்
சிலுவை சுமந்தவரும்
அல்லாவும் எல்லோரும்
பொல்லாத யுத்தமதைப்
புனிதமென்று சொல்லவில்லை
மனித உயிர்க்கொலைக்கு
மன்னிப்பும் கொடுத்ததில்லை

● பாரினிலே பேரழிவால்
பாழான உயிர்களெலாம்
மீண்டு வந்து சேர்வதுண்டோ?
மாண்ட உயிர் மலிவாமோ?

● யப்பானை அணுக்குண்டு
சருகாக்கிச் சென்றதனால்
யாருக்கும் நன்மையுண்டா? - அது
பாருக்கே தீமையடா!

● ஆபிரிக்க நாடுகளை
ஆட்கொண்ட யுத்தமது
ஆள்கொன்று குவிப்பதையும் - மனிதர்
சோறின்றித் தவிப்பதையும்
சோகமாய் சொல்லுதடா!

● ஸ்ரீலங்கா இராணுவத்தினர்
யுத்தமதை அனுபவித்தோம்
உயிர்களை ஆயிரமாய்
உதிர்ந்த சருகாக்கிவிட்டோம்

● செல்வந்த நாடுகள்
செல்வத்தை குவிப்பதற்கு
அணுக்குண்டாய் ஆயுதமும்
ஆலைகளில் உருவாக்க,
நம்மரச நாய்கள்
அதைவாங்கி அடுக்கிவைக்க,
உள்நாட்டில் மக்களுக்கு
உயிர்வாழ உணவில்லை,
உடல் மூட உடையில்லை,
உள்ளதெல்லாம் ஆயுதமே
யுத்தமது தினம் தினமே!

● அகதிகளும், அங்கமிழந்தவரும்,
அனாதைகளும், விதவைகளும்
அளவின்றி உலகிலின்று
யுத்தத்தின் வாரிசுகள்;
சமாதானத் தேவையின்
கண்காட்சி ஓவியங்கள்!

● உறவுகளை இழந்துவிட்டு
உடமைகளை அழித்துவிட்டு
உணர்வுகளை உறங்கவிடும்
யுத்தமிது இன்னும் - உலகில்
உயிர்வாழ வேண்டுமா?
உலகினிலே இன்னுமின்னும்
உயிர்வாழ வேண்டுமா?

● நித்தமெமைத் துயரினிலே
மூழ்கடித்துச் சாகடிக்கும்
யுத்தமிது வேண்டுமா? - எம்
உறவுகளின் உயிர்போக்கி
உடமைகளைத் தீயாக்கி
உலகமதை சாகவைக்கும்
யுத்தமிது வேண்டுமா?

● இதயமெலாம் சுட்டெரித்துத்
துயரமதைக் கொட்டிவிட்ட
யுத்தமிது எரித்துவிட,
யுத்தமென்ற சத்தமில்லா
புத்தம்புது பூமியொன்று
சட்டென்று மலர்ந்திங்கு
சமாதான ராகத்தின்
சங்கீதம் பாடிவர;
உலகத்து உயிர்களெல்லாம்
துன்பத்தை களைந்துவிட்டு
இன்பத்தை அணிந்துகொள்ளும்
சமாதான உலகமொன்று
சந்தோச உலகமொன்று
மலர்ந்துவர வேண்டாமா? - மனிதன்
மகிழ்ந்துவாழ வேண்டாமா?


● சித்தமது தெளிவுடைய
குற்றமற்ற மனிதர்களே!
சத்தமிட்டுச் சொல்லுங்கள்...
உலகில்
யுத்தமா? சமாதானமா?

அன்புடன் இளைஞனின் 'தேடல்' வாசகர்கட்கு, இம்முறை தேடல்த்தூண்டிலில் சிக்கியது 'யுத்தமா? சமாதானமா?' எனும் தலைப்பு. ஈழத்தில் யுத்தம் நடைபெறும் போது இந்தத்தலைப்பு பொருத்தமானதா? என்று நீங்கள் சிந்திக்கக்கூடும். ஆனால், ஈழப் போராளிகளின் சமாதானக் கதவு என்றுமே திறந்தபடியேதான் இருக்கிறது. எனவே சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதான விரும்பிகளான நாம், உலகில் சமாதானப் பூ மலர நீர் இறைக்கலாம் தானே! ஈழத்துப் பள்ளி மாணவன் சகோதரன் சுரேஷின் சிந்தனைச் சிதறல்களை சேகரித்தபடியே, கண்ணீராலும், ரத்தத்தாலும் நனைந்த தேடல் -15 இன் சிறகுகளை விரிக்கிறேன்.

-ரமேஷ் வவுனியன்-



# தேடல் 15 - ரமேஷ் வவுனியன்



# தமிழ் இசையின் தரம்

சங்கீதம் என்றால் இனிமை என்று அர்த்தம். இத்தகைய இனிமை செவிவழியே உட்புகுந்து மனதிற்கு சுந்தோஷத்தை அளிக்கிறது. சங்கீதம் என்றால் சுகம் என்றும் சொல்வார்கள். அகம், புறம் இரண்டினையும் ஐக்கியப்படுத்தி ஒருமித்த தன்மையில் ஊடுருவி நின்று உள்ளம், உடல் இரண்டிற்கும் விவரிக்க இயலாத சுகனுபவத்தை வழங்கக் கூடியது சங்கீதம்!

இறைவனை இசைவடிவமாக கண்டவர்கள் நம் மூதாதையர்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும் மற்றும் பாடகர்களும் இறைவனை இசை வழியே ஆத்மார்த்தமாக உணர்ந்து அனுபவித்ததை அவர்கள் விட்டுச் சென்றிருக்கும் நூல் வழியே அறியலாம்!

சங்கீதம் என்றால் "தமிழி"ல் இசையைக்குறிக்கும். இராகம் என்றால் "பண்"ணையே குறிக்கும். தாளம் என்றால் "அலங்காரம்" என்பதையே குறிக்கும். இன்று மேல் நாடுகளில் இசை பயில்பவர்கள் தாம் வாசிக்கும் (சுரத்தட்டு) பாடல் என்ன இராகம் என்று தமிழில் கூற முடியாது தவிக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். சுரத்தட்டில் இருக்கும் ஏழு வெள்ளை கட்டைகளுக்கும், ஐந்து கறுப்புக் கட்டைகளுக்கும் மேல் நாட்டு பெயர்களை கூறும் நாம், அதனை தமிழிலும் கூறலாமே!

பன்னிரண்டு கட்டைகளுக்கும் தமிழில்:

- குரல்
- குத்தம்
- துத்தத்தினந்தரம்
- கைக்கிளை
- கைக்கிளையினந்தரம்
- உழை
- உழையினந்தரம்
- கிளி
- விளரி
- விளரியினந்தரம்
- தாரம்
- தாரத்தினந்தரம்.

-ராஜா சிவகுமார்-

# அறிவியல் உலகம்

## உயரமான சங்கதி!

உலகிலே அதி உயர்ந்த மலை, அதி உயர்ந்த சிலை, உயர்ந்த கட்டிடம், உயர்ந்த கோபுரம் என்று பல உயர்ந்த சங்கதிகள் நிறைய உண்டு. புகழில் உயர்ந்த மேதைகளைப் பற்றியும் அறிந்துள்ளோம். ஆனால், உருவத்தில் உயர்ந்த மனிதனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் இந்த 20 நூற்றாண்டில் தான் வாழ்ந்திருக்கின்றார். இவர் 22 ஆம் திகதி மாசிமாதம் 1918 ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள ILLINOIS மாவட்டத்தில் பிறந்தார். இந்த அதி உயர்ந்தவரின் பெயர் ROBERT PERSHING WADLOW. கடைசியாக இவர் இறக்குமுன் அளந்தபோது 8 அடி 11 அங்குலம் (272 CM) உயரமாக இருந்தார். இவருக்கு வயது 22 மட்டுமே. ரபேர்ட் தனது 21 வது வயதில் 222, 7 கிலோவாகவும் 22 வயதில் 199 கிலோவாகவும் இருந்து சாதனை படைத்துள்ளார்.



இப்படத்தில் உள்ள ராட்சத உருவத்தைக்கொண்ட பெண்மணியைப் பார்த்தீர்களா? அருகிலிருக்கும் இந்த சராசரி வளர்ச்சி கொண்ட பெண்ணோடு இவரை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவரது உயரம் உங்களுக்குப்புரியும்.

இவருடைய பெயர் SANDY ALLEN 18 ம் திகதி ஜூன் மாதம் 1965 ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள ILLINOIS மாவட்டத்தின் சிக்காகோ நகரில் பிறந்த இவர் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறக்கும் பொழுது இவரது அசாதரண வளர்ச்சி காரணமாக, அவரது 10 வது வயதிலேயே 6 அடி 3 அங்குலத்தை (190, 5 CM) தொட்டுவிட்டார். SANDY 16 வயதை அடையும் பொழுது 7 அடி 1 அங்குலம் (216 CM) உயரமாக இருந்தார். இவரது அசுர வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஓர் சுரப்பியை அகற்றுவதற்காக 1977 ம் ஆண்டு ஜூன் மாதம் 14 ம் திகதி இவருக்கு சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டது. இப்போது SANDY 7 அடி 7 அங்குலம் உயரத்தையும் 209, 5 கிலோ நிறையையும் கொண்டிருக்கின்றார்.

நாம் குள்ளமானவர்களைப் பார்த்து எள்ளி நகைப்பதுண்டு. ஆனால், உயரமாக இருப்பதும் வில்லங்கம் போல்தான் தோன்றுகிறது.

ஆதாரம்: The Gulness book of Records 1995

தொகுப்பு: சிவோமியோ, பாசல் - சுவிஸ்-

## சங்கரி...

ஒரு தொந்தரவு எண்டு கொண்டு."

"சரி சங்கரி முதலில கண்ணனிட்ட இருந்து விடுதலை வேணும் உங்களுக்கு. அதுக்கு நாங்கள் நாளைக்கே ஒரு லோயரைப் போய்ப் பாப்பம். இண்டைக்கே ரெலிபோன் அடிச்சு எத்தனை மணிக்கு வரலாம் எண்டு கேட்டுச் சொல்லுறன். அடுத்தது உங்களுக்கு ஒரு வேலை வேணும். அதுக்கும் எனக்குத் தெரிஞ்ச பொம்பிளை ஒருத்தி இருக்கிறாள். சுப்பர் மாக்கற்றில வேலை செய்யிறாள். அவளிட்ட கேட்டால் கட்டாயம் உதவி செய்வாள். என்ன வேலை எண்டாலும் செய்வீங்களே?"

"சுதா ஹோட்டலில ரொய்லற்றும் கழுவி இருக்கிறன். கண்ணன் எனக்கு எடுத்துத் தந்த வேலை அது தானே. அதால எந்த வேலையும் செய்யத் தயாரா இருக்கிறன் சுதா."

"சீ சீ ரொய்லெற் எல்லாம் கழுவிற வேலை இல்லை, சாமான்கள் அடுக்க வேணும். அதோட ஏதும் ஊத்தை பட்டா கழுவித் துடைக்க வேணும். அது தான் வேலை. எதுக்கும் கேட்டுப் போட்டுச் சொல்லுறன். அடுத்தது சங்கரி வீடு. நான் ஒண்டு சொன்னாக் கோவிக்காமல் கேட்பீங்களே?"

"சொல்லுங்கோ சுதா, நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கத் தயாரா இருக்கிறன். எனக்குத் தெரியும் நீங்கள் என்ன சொன்னாலும் என்ர நல்லதுக்குத் தான் சொல்லுவீங்கள் எண்டு."

"இல்லைச் சங்கரி, வீடு தேடிப் பிடிக்கிறது என்றது அவ்வளவு சுலபமில்லை. அதால வேற வீடு தேடும் வரைக்கும் வேணுமெண்டா என்னோட இருக்கலாம். ரெண்டு அறை வீடு. ரொய்லெற் கிச்சின் எல்லாம் இருக்கு. நான் வேணுமெண்டா என்ர பிரண்ட் ஒரத்தனோட போய்த் தங்கிறன்."

சங்கரி சுதாவை நிமிர்ந்து பார்த்தாள். சுதா தலையைக் குனிந்தான். சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"நீங்கள் வேற ஒரு இடமும் போய்த் தங்கத் தேவையில்லை. எங்களோடயே இருக்கலாம்."

"இல்லை சங்கரி, பிறகு என்னாலயும் உங்களுக்குக் கெட்ட பெயர் வந்திடும். சங்கரி இப்ப உங்களுக்கு நேரம் இருக்கே? இருந்தா இப்பவே என்ர வீட்ட கூட்டிக் கொண்டு போய்க் காட்டுறன்."


"ஓம், ஆனா 12 மணிக்கு டொக்டரிட்ட போக வேணும். வாங்கோ போய்ற்றுக் கெதியா வருவம்." புதியதொரு எதிர்காலம் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சுதாவின் பின்னே நடக்கிறாள் சங்கரி.

தொடரும்......

# "நம்மைக் காப்பது நம் மண்ணே"

ஒரு காட்டிற்குள்ளே ஒரு நஞ்சுப் பாம்பு வாழ்ந்து வந்தது. பலகாலமாக காட்டுக்குள்ளேயே வாழ்ந்து வந்த அந்தப் பாம்பு, ஓர் நாள் நாட்டுப்புறத்தை சுற்றிப் பார்க்க வந்தது.



நாட்டுப் புறத்தினிலே ஓர் அழகான தாமரைக் குளத்தில் பல தவளைகள் வாழ்ந்து வந்தன.

அழகான தாமரைக்குளம், கரையோரங்களிலே வண்ண வண்ணப் பூக்கள், நறுமணம் வீசும் மத்தியில் இந்த தவளைக் கூட்டங்கள் ஒற்றுமையாக விளையாடுவதைக் கண்டு நஞ்சுப் பாம்பிற்கு பொறாமை வந்தது.

அந்த தவளைகளைப் பார்த்து நஞ்சுப் பாம்பு: "ஓ தவளைகளே இந்த சின்னஞ்சிறு குளத்தினிலே வாழ்கின்றீர்கள், என்னுடன் வாருங்கள் இன்னும் எத்தனையோ , டங்கள் பார்க்கலாம், பசியாறலாம்" என்றது.

சில தவளைகள் பாம்பின் கதையைக்கேட்டு செல்ல பாம்பு ஒவ்வொன்றாக பிடித்து தன் பசியைத் தீர்த்தது. ஏனைய தவளைகள் கோபம் கொண்டு சத்தம் போட்டது.

உங்களை பூண்டோடு அழித்து நானே இந்தக் குளத்தை ஆட்சி செய்யப் போகின்றேன் எனச் சொல்லி, தவளைகளைத் துரத்தியது. எல்லாத்தவளைகளும் தமக்குச் சொந்தமான குளத்திற்குள் குதித்தது. ஆசை கொண்ட பாம்பும் குளத்தினுள் குதித்தது.

தண்ணீரில் மூழ்கிய பாம்பு அப்போதே எண்ணியது தனக்கென சொந்தமான காட்டுப்புற்றுக்குள் வாழாமல் குளத்தினில் ஆசைப்பட்டு வீழ்ந்து விட்டேனே யென துடிதுடித்து இறந்தது.

தவளைகளும் அப்போதே சித்தித்தது "தமக்கென ஒரு சொந்தமான குளம் இருந்ததால் உயிர் பிழைத்தோமேயென சந்தோஷப்பட்டது.

"நம்மைக் காப்பது நம் மண்ணே"

-குப்பிளான் வை. யோகேஸ், ஜேர்மனி-

# பொன்மொழிகள்

* உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை பிறக்காதவரையில் இறைவன் மீது ங்களுக்கு நம்பிக்கை பிறக்காது.

-சுவாமி விவேகானந்தர்-

* நமக்கு தடைகளையும், துன்பங்களையும் தரும் இறைவன் அதைத்தாண்ட வெற்றி பெறும் மனத்தையும் கொடுத்திருக்கிறார்.

-இராஜாஜி-

# வளரும் குட்டி எழுத்தாளர்

இந்த ஐரோப்பிய மண்ணில் அந்நிய மொழி மோகத்தில் மயங்கிக்கொண்டிருக்க, தாய் மொழியில் பற்றோடு வாழ்பவர்களை நாம் வாயாரப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.




13 வயது நிரம்பிய சிவோமியா - விவேகானந்தன், தமிழை ஆர்வமாகக் கற்பதுடன், எழுதுவதிலும் இறங்கி இருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதே. பாரீஸ் "ஈழநாடு", "வீரகேசரி" போன்று பல பத்திரிகைகளின் சிறுவர் பகுதிகளுக்கும் எழுதுபவரான இவர், "இளைஞ"னிலும் சிறுவர் பகுதிக்கு எழுதி வருகிறார். புத்தகம் படிப்பது இவருக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு.

வளரும் இந்தக் குட்டி எழுத்தாளரை இளைஞன் வாயார வாழ்த்துகின்றான்.

# புள்ளிகளில் கைவண்ணம்

இனிய சிறுவர்-சிறுமியரே! படத்தில் ஒளிந்திருப்பது என்னவென்று தெரிகிறதா? ஒன்று முதல் 25 வரையுள்ள புள்ளிகளை இணைத்துப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்



# போகிற...

டென்னிஸ் அரங்கில் என்றுமே யாரும் அணிந்திராத ஒன்று. MARY PIERCE என்றழைக்கப்படுபவர் பிரான்ஸ் நாட்டுக்காக விளையாடினாலும், கனடாவில் தான் இவர் பிறந்தவர். FRENCH OPEN சுற்றுப்போட்டியில் இவர் மூன்றாவது சுற்றிலேயே வெளியேற்றப்பட்டு விட்டார். ஒரு விருந்துக்கு வந்தவர் போல டென்னிஸ் மைதானத்தில் குதித்தவர், காட்ட வேண்டியதைக் காட்டியிருந்தால் -அதாவது தன் அபார விளையாட்டுத் திறமையை, ரசிகர்கள் எல்லோருமே சந்தோஷப் பட்டிருப்பார்கள். ஆனால், இவர் வேண்டாததைக் காட்டி, மற்றையோரின் வயிற்றெரிச்சலைச் சம்பாதித்துக் கொண்டதுதான் மிச்சம்.

FRENCH OPEN சுற்றுப்போட்டியில் யார் வெற்றி பெற்றார்கள் என்று கேட்கிறீர்களா?

இறுதி சரித்திரம் படைத்த (3 மணி 3 நிமிடம்) நீண்ட நேர ஆட்டத்தில் ஜெர்மனியைச்சேர்ந்த GRAF, ஸ்பெயின் வீராங்கனையான SANCHEZ ஐ 6 -3, 10 -8 என்ற ஸ்கோலில் வென்றுள்ளார். 19 'SINGLES' போட்டிகளில் வென்றுள்ளதும், STEFFI GRAF ஒரு சாதனை படைக்க உதவியிருக்கின்றது!

# ஈழப்...

செய்தார். திரும்பிய சேர். பொ. இராமநாதனை கொழும்பு துறைமுகத்தில் இருந்து தேரில் ஏற்றி ஊர்வலமாக கொண்டு சென்று அவருக்கு நன்றியும், மரியாதையும் செலுத்தினல் சிங்கள மக்களும் தலைவர்களும்.

எனினும் 1931 இல் அமைக்கப்பட்ட சட்ட நிருபண சபையில் தமிழர்கள் பங்கேற்காது முழு சிங்களவர்களைக் கொண்ட மந்திரி சபை ஆட்சி நடத்தியது. 1936 இல் இருந்து 1947 வரை சிங்கள மகாசபை என்ற அமைப்பு உரவாகி எல்லாம் சிங்களவனுக்கு என்ற கருத்து மேலோங்கியது. சேர். பொ. இராமநாதன், சேர். பொ. அருணாசலம், க. பாலசிங்கம் போன்ற தமிழ்த்தலைவர்கள் தலைகுனிந்து மன முடைந்த நிலையில் காலம் சென்றது. பின்னர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கி ஐப்துக்கு ஐம்பது என்ற பிரதிநிதித்துவ கொள்கையை வற்புறுத்தினார். 1944 இல் வந்த சோல்பரி ஆணைக்குழு தமிழரின் கோரிக்கைகள் யாவற்றையும் நிராகரித்தது.

1948 இல் (04- 02- 1948) நாடு விடுதலை பெற்றாலும், தமிழர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இருக்கவில்லை.

விடுதலை அடைந்ததும் தேசிய கொடி உருவாக்கும் பொழுது விட்டுக்கொடுக்காத பாங்கினை சிங்களர் கொண்டனர். அடுத்து மலையக இந்தியத்தமிழ் தோட்ட தொழிலாளர்களுக்கு இருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவ உரிமையை 1949 இல் நிறைவேற்றப்பட்ட இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமை சட்டத்தின் மூலம் நிர்மூலமாக்கி அவர்களை அரசியல் அனாதைகளாக்கி நாடு அற்றவராய் ஆக்கியது அரசாங்கம். அப்பொழுது மந்திரி சபையில் இருந்த பேராசிரியர் சி. சுந்தரலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோர் எதிர்க்கவில்லை. இதைக் கண்டு சிற்றம் கொண்டு தமிழ் காங்கிரசில் இருந்த பிற்காலத்தில் ஈழத்துக்காந்தி என்றும் தந்தை செல்வா என்றும் போற்றப்பட்ட திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்து எதிர்த்து வாக்களித்தார். அன்று அவர் -'இன்று இந்திய வம்சாவழி தமிழர்களின் கழுத்துக்கு வைக்கப்படும் கத்தி நாளை பூர்வீக தமிழர்கள் மீதும், இஸ்லாமிய தமிழர்கள் மீதும் வைக்கப்படும்' என்று கூறி தனது கட்சியில் இருந்து விலகி தமிழ ரசுக் கட்சியை உருவாக்கி சமஷ்டி ஆட்சியை கோரினார். காலத்திற்கு அறப்போராட்டங்களை நடாத்தினார். மேலும் அவர் கூறியதாவது 'இன்று இந்திய தமிழர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது. நாளை மொழி சம்பந்தமாக பிரச்சனை எழும் பொழுது நிச்சயமாக இலங்கைத் தமிழர்களுக்கும் நீதி மறுக்கப்படமாட்டாது என்பது என்ன நிச்சயம்' என்று அதே நாளில் திரு. செல்வநாயகம் அவர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு ஏழு வருடங்களுக்குப் பின் விடை பகரும் சந்தர்ப்பமும் வந்தது.

(தொடரும்...)

# கேள்வி...

**எதிர்பார்த்து செய்வதில்லை. எதையாவது எதிர்பார்த்து உதவி செய்தால், அது உதவியல்ல. இப்படி தன்னலம் நோக்கிய உதவிகள் சில சங்கடங்களை உருவாக்கும். அதனால் தங்களிடம் உதவி பெற்றவர்கள் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது, அடிக்கடி சொல்லிக்காட்டி உதவி பெற்றவர்களின் இதயத்தைக் குத்திக்கிழித்து ரணமாக்குவதும், உதவி பெற்றவர்கள் இந்த விரக்தியால் நன்றி மறந்து நடப்பதும் தொடரும். ஆக, இன்றைய உலகில் உதவி என்பது ஒருவகை வியாபாரம் ஆகி விட்டது என்பது உண்மையே!**

# அர்த்த...

வஞ்சகம் போன்ற தீய சொற்களுக்கு வரைவிலக்கணம் அவர்கள் மனோநிலையில் பதியப்படுகிறது. அகராதியில் இல்லாத சொற்களுக்கெல்லாம் இங்கே அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. அந்தக்கதைகளைப்போல, பாத்திரங்களைப்போல மனோநிலையில் வளர்கிறார்கள். அதைப்போலவே உருவாகிறார்கள்.

இந்தப்போட்டி பொறாண்மை, வஞ்சகம் என்னவென்றால் மதத்தின் தப்பு அல்லது மதத்தைக்கற்பனை பண்ணியவர்களின் தப்பு அல்லது மதத்தைப் பின்பற்றுபவர்களின் தப்பு.

ஏன் சென்ற இதழில் ப. கிருபாகரன் ஒரு வரி எழுதினார். 'மோகனராஜாவுக்கு ரமேஷ் வவுனியன் காரசாரமான பதிலடி கொடுத்தையிட்டு மகிழ்ச்சி' இதிலிருந்து என்ன புரிகிறது, தனக்கு எதிரான கருத்துடையவன் தாக்கப்படும்போது அடுத்தவன் மனம் மகிழ்ச்சியடைகிறது (வாழ்க இந்துமதம்).

அதுசரி கிருபாகரன் வைகாசி இதழில் நான் எழுதிய பகுதி கற்பனையில் எழுந்த கதையென்று அடித்துக்கூறுகிறீர்களே, நீங்கள் அதேதினம் அதே மினிபேருந்தில் என்னுடன் பயணம் செய்தீர்களா? அப்படியானால் பரந்தனில் உள்ள ஒரு சிற்றூண்டிச்சாலையில் சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்காமல் ஓடிவந்து வண்டியில்த்தாவி ஏறியது நீங்கள்தானா?

ஏன் தமிழர்கள் என்றால் இந்துக்கள் மட்டும்தானா? கிறிஸ்தவர்கள் இல்லையா, அவர்களிடம் வஞ்சகம் சூது எதுவுமே இல்லையா என்று யாரும் கேட்கலாம்.

அவர்களிடமும் உண்டு. அவர்கள் அடிப்படையில் இந்துக்கள், பிற்காலத்தில் அநேகமானவர்கள் இந்திய எம். எல். ஏ க்கள் போல் மதம் (கட்சி) தாவியவர்கள். அநேகமானவர்கள் ஞானஸ்தானம் பெறுவதால்க்கிடைக்கும் அற்ப சலுகைகளுக்காக மதம் தாவியவர்கள். இவர்களை பிரள்வாதிகள் என்று வேண்டுமானால்க் கூறலாம்.

(தொடரும்...)

# ஆபத்தோடு விளையாடும் அழகி!



பெண்கள் என்றால் மென்மையானவர்கள்தானே என்று கூறிவந்த காலமெல்லாம் காற்றோடு போய் விட்டது.

எதிலுமே 'பெண்கள் ராஜ்யம்' இன்று கொடிகட்டிப்பறக்க ஆரம்பித்துவிட்டது. (அப்படிப் பறந்த ஒரு ராஜ்யம் கவிழ்க்கப்பட்டு விட்டதும் பழைய கதையாகி விட்டது.) ஸ்பெயினில் மரணத்தோடு விளையாட ஆசைப்படுகிறார் ஒரு மங்கை! அவர் பெயர் CRISTINA SANCHEZ (இவர் டென்னிஸ் வீராங்கனைக்கு உறவினரல்ல) 24 வயதான இவர், ஆண்களைப் போல 'BULL FIGHT' இல் இறங்கி தன் வீரத்தைக்காட்டி வருகிறார். ஸ்பெயினில் மாடுகளை வதைக்கும் இந்தப் பிரபல்யமான விளையாட்டில், ஆண்களே பெரும்பாலும் கலந்து கொள்வது வழக்கம். கடந்த 6 வருடங்களுக்குள் 400 திடகாத்திரமான மாடுகளுடன் இவர் கோதாவில் இறங்கி வென்றிருக்கிறார். 3 தடவைகள் இவற்றின் கொம்முகளால் நன்றாகவே கிழிக்கப்பட்டிருக்கிறார். மேலும் பல பெண்கள் இந்த விளையாட்டில் இறங்குவதுண்டு. எனினும் இப்படியான விளையாட்டுக்காரர் ஒருவர் முதற்தரத்தை எட்டும் போது MATADOR DE TOROS என்ற நிலையை அடைவதுண்டு. சில வாரங்களுக்கு முன்பு இவருக்கு இந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஸ்பெயின் முதற் பெண்மணி இப்படி ஒரு பட்டத்தைப் பெற்று சாதனையாளராகி இருக்கிறார்.

இனி வெறும் மாடுகளோடு இவர் போராடப்போவதில்லை. நன்றாக வளர்ந்த திடகாத்திரமான 1300 இறாத்தல்கள் வரை . எடை கொண்ட பயில்வான் மாடுகளோடு களத்தில் குதிக்கப்போகிறார்.

பூவைகள் என்று கவிஞர்கள் பெண்களை வர்ணிப்பதுண்டு. இனிக்கவிஞர்கள் இப்படியான பெண்களுக்கு புதுப்பததைத்தான் தேடி வர்ணிக்க வேண்டும்! (ஏ. - ஜே. ஜி)

# புலிகளி...

*உலவித் திரிந்த JAUGAR என்ற இனப்புலியை, ஆபிரிக்க காட்டில் இருக்கும் LEOPARD என்னும் பெண் சிறுத்தைப் புலி தன் கணவனாக ஏற்றுக் கொண்டதன் அன்புப் பரிசாக இரண்டு குட்டிகள் பிறந்திருக்கின்றன.*

*இப்பொழுது 3 மாதங்கள் வயதை எட்டிப்பிடித்து விட்ட இக்குட்டிகள் இரண்டும், ஜெர்மனியில் HAMM என்னுமிடத்தில் உள்ள மிருகக்காட்சி சாலையில் (NORD - RHEIN -WESTFFALEN) பார்வைக்கு உள்ளன. பப்பா "O-NKA" வுக்கும், மம்மி "LENA" வுக்கும் அளவு கடந்த கதுாகலம்! கலப்பில் வந்த புது இனங்களாயிற்றே! "JAGUPA-RD" என்று இக்குட்டிகள் ஒரு புதுப்பெயரால் அழைக்கப்படுகின்றன.*

*கலப்புத் திருமணங்களுக்கு நீங்களும் தயாராகின்றீர்களா?*

# சிறுகதை...

ஊரில் உள்ள வீட்டை விற்ற பின் புனிதவதியார் குடும்பம் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஒரு அறைக்ஸ் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். ஜெயசூரியாவின் ஏஜென்சிக்கு வீட்டை விற்ற பணம் நாலு இலட்சமும் கட்டி ஒரு மாதத்தில் குறிப்பிட்ட சிங்களப் பெண் வந்து முறைப்படி திருமணப்பதிவு செய்தும் ஒரு வருடம் ஆகிறது. இரண்டு கிழமையில் சுரேசை அழைப்பதற்கான தஸ்தாஸ்த்துக்களை அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் ரிக்கற்றை Bபுக் பண்ணுங்கோ என்று சொல்லிவிட்டு போனவள் இன்னும் ஒரு பதிலும் இல்லை.

பாரீஸ்சில் உள்ள தனது நண்பர்கள் மூலம் துரைசிங்கத்தார் விசாரித்துப் பார்த்ததில் அப்படி ஒரு விலாசமும் அங்கு இல்லை என்று அறிந்து கொண்டார்.

புனிதவதியார் குடும்பத்திற்கு அடுத்த அதிர்ச்சி சுரேஸ்சின் விவாகப்பதிவு முடிந்து அடுத்த வாரம் கொள்ளுப்பிட்டியில் அவர்கள் வசித்த அறைக்சில் இருந்து சுரேசை விசாரணைக்காக அழைத்துச்சென்ற இராணுவம் எங்கு வைத்திருக்கின்றார்கள் என்று கூடச்சொல்ல மறுக்கின்றார்கள்.

இராணுவம் தமிழரைக் கைது செய்வதற்குக்காரணம் தேவையில்லை. அவர்கள் சிங்களவர்களோடு விசுவாசமோ தமிழர்களுக்குப் பகையோ என்பது எல்லாம் கிடையாது. பிறப்பால் தமிழன் ஆனால் அவர்களுக்கு எதிரிதான். இதில் சுரேஸ் விதிவிலக்கல்ல.

கொள்ளுப்பிட்டியில் ரயில்வே நிலையத்தில் வந்து இறங்கிய துரைசிங்கத்தார் தாங்க முடியாத கவலையில் அங்கிருந்த பெஞ்சில் யோசனையோடு உட்கார்ந்து விட்டார்.

இராணுவ முகாமிற்கு சுரேசைப் பற்றிய தகவலை அறியச்சென்ற துரைசிங்கத்தார் இன்னும் காணாமையால் சுவரில் சாய்ந்த வண்ணம் பல்லைக்கடித்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் புனிதவதியார்.

வாடிய முகத்தோடு வந்த துரைசிங்கத்தாரை ஆவலோடு சென்று என்ன, ஏதும் அறிஞ்சியலோ என்று கேட்கவும் அவங்கள் எங்க வைச்சிருக்கிறம் என்று சொல்வதற்கு ஒரு இலட்சம் கேட்கிறார்கள் என்று சொல்லிவிட்டு பக்கத்தில் இரந்த கதிரையில் ஒரு ஏக்கப் பெருமூச்சோடு உட்கார்ந்தார். இதைக்கேட்ட புனிதவதியாருக்கு வன் லாக் என்று கூறிக்கொண்டு இடிஞ்சு போய் பக்கத்தில் உள்ள சாய்மனையில் சாய்ந்தார்.

# ரிவிரெச...

றைத்திறப்பதன் அவசியத்தை அரசாங்கம் உணர்கின்றது. யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவில் தாண்டிக்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதி முழுமையாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இப்பகுதியிலுள்ள பிரதான பாதை ஒன்றை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதன் மூலமே யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதை ஒன்றை அரசாங்கத்தால் ஏற்படுத்த முடியும். இதற்கான மற்றொரு தாக்குதலை கிளிநொச்சிப்பகுதியிலிருந்ழ இராணுவம் ஆரம்பிக்கலாம் என்ற எதிர்பார்ப்புகளைத் தவறானவை எனக்கருதிவிட முடியாது.

ஆனால், ஆட் பற்றாக்குறைதான் இதற்கான தாக்குதலை இராணுவம் உடனடியாக ஆரம்பிக்காததன் காரணம் என்று கூறியுள்ளார் இராணுவ விமர்சகர் ஒருவர். இதற்காக ஜெனரல் ரத்வத்தை முதலில் போட்ட திட்டம் இப்போது செயலற்றுப் போய்விட்டதாகத் தெரிகிறது. தற்போதுள்ள இராணுவ பலத்தைப்பயன் படுத்தியே வன்னித்தாக்குதலை நடாத்த முடியும் என அவர் கணக்குப்போட்டிருந்தார்!

யாழ்ப்பாணம் ஒரு குடாநாடு என்பதால், அதனைச்சுற்றியுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் ஒரு "இராணுவ வேலி"யை அமைத்து புலிகளின் ஊடுருவலைத்தடுப்பதும், இதற்கு அதிகளவு இராணுவம் தேவைப்படாது. உள் பகுதிகளில் பொலிசாரைப் பயன்படுத்துவது. இதுதான் அவரது திட்டம். இதன் மூலமே குடாநாட்டிலுள்ள கனிசமான படையினரை வெளியே எடுத்து, வன்னியில் பாதை திறக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம் என்பதே இராணுவத்தின் வியூகமாக இருந்தது.

யாழ்ப்பாணத்திற்குள் புலிகள் ஆரம்பித்துள்ள புதிய முறையிலான கெரில்லாத்தாக்குதல்கள் அரசாங்கத்தின் இந்த வியூகத்தில் வெடிப்பை ஏற்படுத்திவிட்டது. இதனால்த்தான் பாதை திறப்பதற்கான இராணுவ நடவடிக்கை 'தொடர்ந்தும்' பின்போடப்பட்டுக்கொண்டே செல்கின்றது!

-------

இதனைவிட பாதை திறப்பதைச் சாத்தியமாக்கலாம் என ரத்வத்தையும் சந்திரிகாவும் நம்பியதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. வலிகாமத்தைக்கைப்பற்றியுள்ள 'ரிவிரெச-1' நடவடிக்கையின் முடிவில் புலிகளின் பலம்

# இராணுவ எண்ணக்கருவும் யதார்த்த நிலைமைகளும்

அரைவாசியாகக் குறைக்கப்படும் என ரத்வத்தை நிச்சயமாக நம்பினார்.

ஆனால், புலிகளின் தரப்பில் சுமார் 500 பேர் மரணமடைந்த அதே வேளையில், இழப்புக்களை மேலும் ஏற்காது தமது ஆயுத தளபாடங்கள் அனைத்துடனும் புலிகள் வன்னிக்குச் சென்றுவிட்டனர். இதனால் இராணுவம் எதிர்பார்த்தளவுக்கு விடுதலைப் புலிகளின் பலம் குறைக்கப்படவில்லை

இராணுவம் எதிர்பார்த்தது போல புலிகளின் பலம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டிருநதால், பாதை திறப்பது சில சமயம் சாத்தியமாகியிருக்கலாம்.

இதனால்த்தான் ரத்வத்தை சொன்னார், 'வலிகாமச் சமருடன் யுத்தத்தில் 60 வீதம் வெல்லப்பட்டுவிட்டதும், மிகுதி 40 வீதத்தையும் இராணுவத்தினர் விரையில் வென்றுவிடுவார்கள்' என.

தனது கணிப்பு எந்தளவுக்குத் தவறானது என்பதை உணர்ந்து கொண்டிருப்பாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால், புலிகளின் பலத்தை கனிசமானளவுக்குக் குறைக்காமல் பாதை திறப்பது சாத்தியமாகாது என்பதை அவர் உணர்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

இதனால், புலிகளின் பலத்தைக் குறைப்பதற்காகவாவது ஒரு சில இராணுவ நடவடிக்கைகளை வன்னிப் பகுதியில் இராணுவம் மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. புலிகளை வலுச்சண்டைக்கு இழுத்த அவர்களைப் பலவீனப்படுத்துவதே இராணுவத்தின் நோக்கமாக இருக்கும்.

புலிகளின் முழுப்பலமும் வன்னிப் பகுதியிலேயே குவிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் அறுபது மைல் தொலைவான பாதை ஒன்றை காட்டுப்பகுதியூடாகத் திறப்பது ஆபத்தானதென்பது ரத்வத்தைக்குத் தெரிந்ததுதான். ஆனால், ஒரு பரிசோதனை முயற்சியாக முழுமையான படைப்பலத்தைப் பயன்படுத்த வன்னிப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட விமான தாக்குதல் ஒன்றை அரசபடைகள் மேற்கொள்ளலாம்.

ஆனையிறவு மற்றும் பூநகரி முகாம்களிலிருந்து கிளிநொச்சிப் பகுதியை நோக்கிச் செல்வதே இராணுவத்தின் இதற்கான இலக்காக இருக்கும் எனக்கருதப்படுகின்றது. இதனால் கிளிநொச்சிப் பகுதியில் ஏற்கனவே பதற்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனையிறவை அடுத்துள்ள பரந்தன் போன்ற பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் வெளியேறியிருக்கின்றார்கள்.

அரசின் இராணுவ முனைப்புக்களின் பின்னணியில் அரசியல் தீர்வு முயற்சிகள் பின்தள்ளப்பட்டுள்ளன. அரசியல் தீர்வைப் பற்றிப் பேசிக்கொண்டு இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவதே அரசின் நோக்கம் என்பதை அதன் செயற்பாடுகள் அனைத்தும் நிருபிக்கின்றன. ■

# திருட்டு...

களையும் தடுக்க வேண்டிய, பொதுமக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய போலீசே திருடத்தொடங்கி விட்டது. ஆம், ஜேர்மன் பொலீஸ்காரர் ஒருவர் முன்சன் எனும் இடத்தில் தனது திருட்டுத்தனத்தைக் காட்டியிருக்கிறார். இது இவரது இரண்டாவது திருட்டு. 25 வயதான தோமஸ் என்பவரே இந்தத்திருட்டைச் செய்திருக்கிறார்.

இவர் ஒரு அற்புதமான விளையாட்டு வீரர். ஜூடோ போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும் பெற்றவர். கடந்த 17.6.96 அதிகாலை 4.30 மணியளவில் ஈன்சனில் உள்ள (ARAL TANKSTELLE) அறால் பெற்றோல் செற் ஒன்றுக்குள் புகுந்து 6000 DM ஐக் திருடிக்கொண்டு ஓட முற்பட்டபோது, அங்கு வேலைசெய்யும் பீற்றர் என்பவரால் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டார். சூடு வாங்கிய பொலீஸ்காரர் தப்பியோட எத்தனித்தும் அவரால் முடியாமல் போய்விட்டது. இவர் ஏற்கனவே ஜனவரி மாதம் இதே பெற்றோல் செற்றில் 5000 DM திருடிக்கொண்டு தலைமறைவாகியவர்.

இரண்டாவது தடவை அது அவருக்கே உயிருக்கே உலைவைத்து விட்டது. 22.6.96 ல் இவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

# லட்சுமன்...

பா.ம.கட்சி கண்டிப்பதோடு அன்றைய தினத்தை கறுப்பு தினமாகவும் அறிவித்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் செயல்ப்படும் இலங்கையிலேயே அதனைத்தடை செய்யாதபோது, இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் செயல்படாத போது அவர்களுக்கு தொடர்ந்தும் இரண்டு வருடங்கள் தடையை நீடித்திருக்கும் இந்தியாவில் புதிதாக அமைந்திருக்கும் மத்திய அரசின் செய்ல் தமிழர்களை மேலும் புண்படுத்தும் என்று இன்னுமோர் அறிக்கை மூலம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் டாக்டர். ராதாஸ் அவர்கள்.

அமெரிக்காவில் வாழும் 50 லட்ச யூதர்கள் இஸ்ரேலில் வாழும் யூதர்கள் பாதுகாப்பிற்காக குரல் கொடுத்து அமெரிக்க வெளியுறவுக் கொள்கையிலேயே மாற்றம் செய்து ஐ.நா. மன்றத்திலேயே ஆதரவுக் குரல் ஒலிக்க வழி செய்திருக்கும் போது, இந்தியாவில் வாழும் 7 கோடி தமிழர்களால் மத்திய அரசை வற்புறுத்தி ஈழத்தமிழர்கள் பாதுகாக்க முடியாதா? என்றும் ஓர் வினாவை எழுப்பியிருக்கிறார் டாக்டர். ராமதாஸ் அவர்கள்.

# விவாத மேடை...

**சில விடயங்களுக்கு நாம் தலைப்பிடுவது தலைப்பு ஒன்று வேண்டும் என்பதற்கே. சிலவிடங்களுக்கு நாம் தலைப்பிடுவது தலைப்பைத் தகுதிப்படுத்தவே.**

**(அர்த்தமற்ற இந்துமதம் மீதான, சாந்தினியின் மிகுதி விமர்சனம் அடுத்த இதழில் இடம் பெறும். -இளைஞன்-)**

http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
1080/09

Largest Circulation in Europe
இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany
Tel: 069/ 704439, Fax: 069/ 775669

மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்!

லிங்கம் ஏசியன் மாக்கற்

ஜவுளி அகம் / மளிகைப் பொருட்கள்
தங்க மாளிகை / வீடியோ விஷன்

PIZZERIA MARE
Bruck str 37, 44135 Dortmund
Tel: 0231/ 55 16 84

LINGAM ASIAN MARKET
Adler str 5, 44137 Dortmund
Tel & Fax: 0231/ 14 38 11

PIZZERIA ISOLABELLA
Olpe 14, 44135 Dortmund
Tel & Fax: 0231/ 57 29 02

— வெண்தாமரை இயக்கம் —

# தமிழரை அழிக்கும் படையினரின் நலன் காக்கும் அமைப்பாகும்!

(கொழும்பு)

இன ஒற்றுமையை வளர்ப்பதற்காக வெண்தாமரை இயக்கத்தை தாம் பயன்படுத்துவதாக ஜனாதிபதி குமாரதுங்க குறிப்பிடுகிறார். ஆனால், வெண்தாமரை இயக்கத்திற்கும் இன ஒற்றுமைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இவ்வாறு கொழும்பு தமிழ்த் தினசரி ஒன்றில் தமிழ்க்கட்சித்தலைவர் ஒருவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அக்கட்டுரையில்:

உண்மையில் வெண்தாமரை இயக்கத்தின் நோக்கம் ஆயுதம் தாங்கிய படை உறுப்பினர்களினதும் அவர்களில் தங்கி வாழ்பவர்களினது நலன்களைக் கவனிப்பதே யாகும்.

ஒரு புறத்தில் தமிழ் இனத்திற்கும் மறு புறத்தில் முழுக்க முழுக்க சிங்களப்படையினருக்கும் எதிராக நடக்கும் போரில் படையினரின் நலன்களைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே இதுவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருட்டுப் போலீஸ்

(ஜேர்மனி)

திருட்டுக்களையும் கொலை

தொடர்ச்சி 23 ம் பக்கம்...



9 வருடம் போலீசில் வேலை செய்த தொமாஸ்

# மனிதன் கடித்ததால் நாய் செத்தது!

(ஓரேகன்)

மனிதனை நாய் கடித்ததாக கேள்விப்பட்டிருக்கிறோம். நேரில் பார்த்திருக்கிறோம். அதை நாமே உணரவும் செய்திருக்கலாம். ஆனால், நாயை மனிதன் கடித்ததாக கேள்விப்பட்டதுண்டா? அப்படியே கேள்விப்பட்டாலும் அதை நம்மில் பலர் நம்புவதில்லை. ஆனால், மனிதன் ஒருவனால் கடிபட்ட நாய் செத்துப்போன சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள ஒரேகன் நகரத்தில் ஜான்குடினோவ் என்பவர் மீது திருட்டு குற்றம் சாட்டப்பட்டது. அவரை பிடிக்க போலீஸ் நாயுடன் போலீசார் விரைந்தனர். சுமார் 27 கி.மீ. தூரம் கடந்த பின் நாய் அந்த ஆசாமியை விரட்டிப்பிடித்தது. அப்போது அவர் நாயின் மூக்கில் கடித்து விட்டார். பின்னர் 3 1/2 வாரத்திற்குப் பிறகு நாய் பரிதாபமாக செத்துவிட்டது.

நாய் செத்தற்கான காரணம் பற்றி விசாரித்தபோது திருட்டு ஆசாமி நாயை கடித்தபோது போதையில் இருந்தாராம். அது எப்படியோ நாயை சாகடித்து விட்டது. நாயைக் கடித்தவர் சிறையில் அடைக்கப்பட்டார். அத்துடன் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் கலப்புத் திருமணம்



நமது சமுதாயத்தில் பலர், வெவ்வேறு இனத்தவரையெல்லாம் கைப்பிடித்து 'கலாச்சாரப் புரட்சிகள்' செய்து வருகிறார்கள். கலப்புத் திருமணம் என்ற பெயரில் இவர்களது புரட்சியான திருமணம், பலரது கவனத்தை ஈர்க்கத் தவறுவதில்லை.

இரண்டு கால் மனிதருக்கு, நாலுகால் விலங்குகள் நாம் சளைத்தவர்களல்ல என்று நிருபிப்பது போல, இரண்டு புலிகள் கலப்புத் திருமணத்தில் இறங்கியிருப்பதுதான் இப்பொழுது சொல்ல வருகின்றோம்.

தென் அமெரிக்க காட்டில்

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

யாழ் ரேடர்ஸ்



(KRISHNA)
Specialist fur
Asiatisch
lebensmittel

உங்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்கள், ஓடியோ, சீ.டி, திருமண வைபவங்களுக்குரிய பட்டுச்சேலைகள், பட்டு வேட்டிகள், வீட்டுப்பாவனைக்குரிய சகலவிதமான பொருட்களுக்கும், இலங்கை, இந்திய கடலுணவுப்பொருட்கள், புத்தகங்கள் என்பவற்றினை மலிவாகப்பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஓரே இடம்..

YARL TRADERS, Taunus Str 24 A, 60329 Frankfurt, Tel: 069/ 234632, Fax: 069/ 234632